உ

வேலும் மயிலும் சேவலும் நமக்கு உற்ற துணை

ஸ்ரீஸுப்ரஹ்மண்ய ஸர்வ ஶத்ரு ஸம்ஹார த்ரிஶதி அர்ச்சனை

மூலமும் பொருள் விளக்கமும்

ஆக்கியோன்

ஆதித்யா கல்யாணராமன்

மென்பொறியாளர்

திருவனந்தபுரம்

வெளியீடு

திருப்புகழ் சித்திர சபை

திருச்செந்தூர்

முதற் பதிப்பு : ஜனவரி 2025

© உரிமை : ஸ்ரீ முருகானந்த சங்கீத திருப்புகழ் சபை
73, தெப்பக்குள தெரு,
திருச்செந்தூர் – 628 215

Printed by : LKM Computer Printers, Chennai-17
Phone : 9940682929

HIS HOLINESS DHAKSHINA SHIRDI PEETAM
DWARAKAMAI ASHRAM
Thavathiru. SriLaSri. Dr.A.V.SHANTHIKUMARA SWAMIGAL
'N' Block, Aura Homes, Lake Area 8th Street, 2nd Cross, (Near Mattuthavani), Madurai - 625107
Cell.:99940-23032

ஆசியுரை

தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தம்மினின்று தம்மையே ஒத்து விளங்கவல்ல முருகனைத் தோற்றுவிக்கத் திருவுள்ளம் கொண்டார் சிவபெருமான். அப்பொழுது ஐந்து திருமுகங்களோடு அதோமுகம் எனப்படும் திருமுகத்தை வெளிப்படுத்தி அறுமுகக்கோலம் கொண்டு நெற்றிக் கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் தோன்றின.

அந்திக்கு நிகர்மெய் அண்ணல் அருள்புரிந்து அறிஞர் ஆயோர்
சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டார்

என்பது கந்தபுராணம். தொல்லைத் திருமுகம் - பழமையான அதோமுகம் சேர்ந்த ஆறுமுகம்.

சிவபெருமானுக்குரிய ஐந்து திருமுகங்களுள் மேல் நோக்கிய முகம் ஈசானம்; கிழக்கு நோக்கிய முகம் தத்புருஷம்; தெற்கு நோக்கிய முகம் அகோரம்; வடக்கு நோக்கிய முகம் வாமதேவம்; மேற்கு நோக்கிய முகம் ஸத்யோஜாதம். மிகவும் மறைநிலையில் உள்ள அதோமுகம் என்பது சிவபெருமானின் ஆறாவது முகம்; அது கீழ்நோக்கிய முகம். (அத - கீழ்)

சிவமுகம் ஐந்தும், சிற்சத்தியாகிய சிவசக்தியின் முகம் ஒன்றும் சேர்ந்து, ஆறுமுகங்கள் தான் ஆறுமுகப் பெருமானின் திருமுகங்கள்.

பூவியல் சரவணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகட்கு அருளுமாற்றால் ஆறுமுகம் கொண்டான் அன்றே

ஐந்தொழில் ஆற்ற வேண்டிக் கொள்ளப்பட்ட இத் திருமுகங்களுள் ஸத்யோஜாதம் பிரம்மன் மூலம் படைக்கும்; வாமதேவம் விஷ்ணு மூலம் காக்கும்; அகோரம் ருத்ரன் மூலம் அழிக்கும்; தத்புருஷம் ஈஸ்வரன் மூலம் மறைக்கும்; ஈசானம் சதாசிவம் மூலம் அருளும். சக்தி என்றும் குடிலை என்றும் கூறப்படும் அதோமுகம் இவ்வைந்து தொழில்களுக்கும் மூலகாரணமான பரப்ரம்மமாய் விளங்கும். இதனை,

சத்தியோ சாதம் எல்லாச் சகத்தையும் படைக்கும்; வாமம்
அத்தரா தலங்கள் காக்கும்; அகோரமே அழிக்கும் என்க;
சித்தியார் புருடம் திரோதம் செய்யும்; ஈசானம் அன்பால்
முத்திவீடு அருளும் ஐந்தின் மூலமாய் குடிலை நிற்கும்

என்று 'செக்கர்வேள் செம்மாப்பு' நூலில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இனிது விளக்கியருள்வார்.

ஆகமங்களில் விசேஷமாக குமாரதந்திரம் இதனை ஷண்மூர்த்தி மந்திரங்கள் மூலம் விளக்கியமையும். ஜகத்புவம், வசத்புவம், விஸ்வபுவம், ருத்ரபுவம், பிரஹ்மபுவம், புவனபுவம் (அக்னிபுவம்) என்பவை ஷண்மூர்த்தி மந்திரங்கள். இவற்றுள் ஓம் வசத்புவே நம: என்பது பெருமானுக்குரிய ஷடக்ஷர மந்திரம். இம்மந்திரத்திற்கு, 'சிவனைநிகர் பொதியமலை முனிவர்' அகத்தியப் பெருமானே ரிஷியாக விளங்குபவர்.

ஆறுதிசைகளிலும் சிதாகாசமாக நிறைந்திருக்கும் பரமான்மாவே ஆறுமுகக் கடவுளாகும். அந்த 'ஆரணன் பெயர் ஆறு அக்கரங்களே' என்று 'ஆறெழுத்து உண்மை'யில் பாம்பன் சுவாமிகள் எடுத்துரைப்பர். அதாவது வேத சொரூபமானவன் பெயர் ஷடக்ஷரம்.

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மந்த்ர ஸம்மேளந த்ரிஶதீ ஒவ்வொரு திருமுகத்திற்கும் ஐம்பது நாமாவளிகள் மூலம் அமைக்கப் பட்டிருக்கிறது. சிவபெருமானின் 'புனிதநாமமான' ஐந்தெழுத்து மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தைக் கொண்டும் முதல் 250 நாமாவளிகள் அமைகின்றன. 'நமசிவாய' மந்திரத்தில உள்ள நகாராதி, மகாராதி, **ஶி**காராதி, வகாராதி,

யகாராதி என்ற வகையில் அமையும். நிறைவாக அமைகின்ற நாமாவளிகள் அதோமுகமாகிய சக்தியைக் குறிக்கும் வகையில் மாத்ருகா அட்சரங்களின் தொடக்கமாகக் கொண்டு அருளப்பட்டவை. அட்சரம் அழிவில்லாதது; முடிவில்லாதது. இவையனைத்தும் ஆறு ஆதாரங்களிலும் ஆறு பிரிவுகளாக அமைந்துள்ளன. எனவே, ஷடக்ஷரம் என்பது ஆறு பிரிவுகளாக ஆறு ஆதாரங்களிலும் விளங்கும் மாத்ருகா அட்சரங்கள் எனப்படும். நாத நாயகன் ஆறுமுகப் பெருமானே ஷடக்ஷரபதியாக விளங்குகின்றான். அட்சர ரகசியத்தை குரு சீடர் முறையில் அறிந்து கொள்ள வேண்டும் என்பது சம்பிரதாய முறை.

ஸ்ரீவித்யா பஞ்சதஸாக்ஷரி, உபாஸனா மார்க்கத்தில் அம்பிகைக்குரிய பதினைந்து எழுத்துகள் கொண்ட மந்திரம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய பஞ்சதஸாக்ஷரீ முருகனுக்குரிய பதினைந்து எழுத்துகள் உடைய மந்திரம். அம்பிகையின் யந்திரமான ஸ்ரீசக்ரம் நாற்பத்துமூன்று முக்கோணங்களை உடையது. அதேபோன்று முருகனுக்குரிய மஹா ஸுப்ரஹ்மண்ய யந்திரமும் நாற்பத்துமூன்று முக்கோணங்களை உடையது. ஒரே எண்ணிக்கையில் மந்திர அட்சரங்களும் யந்திர கோணங்களும் அமைந்திருப்பது பரம்பொருள் தாயும் சேயுமென அருளும் நீர்மையை விளக்கும்.

இவ்வாறு அமைந்த 'பெரும் பெயரான' த்ரிशதியின் பெருமையைப் புரிந்து, பொருளுணர்ந்து அன்பர்கள் அனைவரும் ஓத வேண்டும் என்னும் ஆவல் கொண்டு அதனைத் தாமும் ஓதிப் பெற்ற பயனாக நமக்கு இதனை எம்பெருமானுடையை திருவருளால் நூலாக அச்சிட்டு நம் திருக்கரங்களில் வழங்குபவர் அன்பிற்க்கினிய 'ஆசைகூர் பத்தர்' திரு. ஐயப்பன் அவர்கள்.

அடியார்க்கு வேண்டிய பொருளை அருளி, அள்ளி வழங்குபவரான ஆறுமுகப் பெருமானின் திருவடிகளை, **'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்'** என்று திருமுருகாற்றுப் படை குறிக்கிறது. அதாவது 'அடைக்கலமாக

அடைந்தோரைத் துன்பத்தில் வீழாது தாங்கும் ஒளிபொருந்திய திருவடிகள்' என்பதாகும்.

முருகன் திருப்புகழை அருளிச் செய்த அருணகிரிநாதப் பெருமான் தாம் அருளிய கந்தர் அலங்காரத்தில்,

அவன்கால் பட்டு அழிந்தது இங்கு என்தலைமேல்
அயன் கையெழுத்தே

என்று ஆறுமுகனின் திருவடிச் சிறப்பை போற்றியருள்வார்.

இதனையே வழிமொழிந்து சிதம்பர சுவாமிகளும் தம் திருப்போரூர் சந்நிதி முறையில்,

குகன் பதம் ஆடும் சென்னிக்கு இல்லை
பிரமன்துயர் உறக் கீறும் எழுத்துகளே

என்றருளிச் செய்வார்.

த்ரிஶதி ஓதி வழிபடும் அன்பர்களுக்கு இதனை அறுமுகப் பெருமான் அருளிச் செய்ய வேண்டுமாய் பிரார்த்தித்து அமைகிறேன்.

மேலும், **'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸ:'** என்று வேதம் துதிக்கும் பரம்பொருளே குருவடிவாகி சீரடிக்கு வந்து அருள்புரியும் என் ஸத்குரு ஸாயிநாதனும் இன்னும் அனைத்து நலன்களையும் அனைவருக்கும் அருள்வாராக.

மூவிருமுகங்கள் போற்றி, முகம்பொழி கருணை போற்றி,
ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி, காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி, அன்னான்
சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல் போற்றி போற்றி

என்றும் வேண்டும் இன்பஅன்பு

மார்கழி
மிருகசீரிடம்
12 ஜனவரி 2025
மதுரை.

12 ஜனவரி 2025

திருப்புகழ் சித்திர சபை நிர்வாகியின் அனுபவ உரை

திருச்செந்தூரில் அமைந்துள்ள ஸ்ரீமுருகானந்தா சங்கீத திருப்புகழ் சித்திர சபையின் நிர்வாகியான கயிலைமணி ப்ரம்மஸ்ரீ முத்து சுப்ரமணிய தீக்ஷிதர் ஐயா அவர்கள் தமது 86வது வயதிலும் **ஸ்ரீ**த்ரு ஸம்ஹார யந்த்ர பூஜையையும் அதன் அர்ச்சனை வழிபாட்டையும் கடந்த 50 ஆண்டுகளாக செய்து வருகிறார்கள். அது பற்றி அவர் கூறும் கருத்துக்கள் நமக்கு நல்வழிகாட்டியாகும்.

முருகப்பெருமானின் திருக்கல்யாண குணங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றுள் முக்கியமான 300 குணங்களின் வழிபாட்டுத் தொகுப்பு த்ரி**ஸ்ரீ**தி எனப்படுகிறது. த்ரி**ஸ்ரீ**தி அர்ச்சனை 6 பீஜ மந்திரங்களைக் கொண்டது. ஒவ்வொரு பீஜ மந்திரத்துடனும் இணைந்து உச்சரித்திட 50 நாமாவளி மந்த்ரங்கள் உள்ளன. எனவே ஆறு பீஜ மந்திரங்களுடன் கூடிய தெய்வீக மந்த்ரங்களின் தொகுப்பு 300 ஆகும்.

முருகப்பெருமானை, த்ரி**ஸ்ரீ**தி அர்ச்சனை வழிபாட்டின், முதல் பீஜ மந்திரத்தில், ஸ்ருஷ்டியின் காரணகர்த்தாவாகவும், இரண்டாவதில் ஸ்திதிகாரணராகவும், மூன்றாவதில் ஸம்ஹார காரணராகவும், நான்காவதில் திரோபாவகாரணராகவும், ஐந்தாவதில் ஸதா**ஸ்ரீ**வ அனுக்ரஹகாரணராகவும் வழிபடு கிறோம். இந்த ஐந்தாவது பீஜ மந்த்ரம் தேவ அனுக்கிரகத்தை அளிக்கவல்லது. ஈசனையும் **ஸ்ரீ**ரவணனையும் பொதிந்த ஏகமான இறைவனை இறைஞ்சும் இணையற்ற மந்த்ரம் இது.

ஆறாவது பீஜ மந்திரம் நம: **ஸ்ரீ**வாய அம்**ஸ்ரீ**த்தை கொண்டு **ஸ்ரீ**ரவண அஸ்திரங்களையும் சிவ அஸ்திரங்களை யும் பிரயோகம் செய்கிறது. இது எல்லா பீஜ மந்த்ரங்களுக்கும் பொதுவான அஸ்த்ரப்ரயோக மஹாமந்த்ரத் தொகுப்பு.

ஸ்ருஷ்டி ப்ரஹ்ம அம்**ரா**மான அருள் சக்தி. எனவே முருகன் ப்ரஹ்ம ஸ்வரூபியாக ஆராதிக்கப்படுகிறான். ஸ்திதி இன்புற்று வளமுடன் வாழும் நிலை, காக்கும் கருணை சக்தி. எனவே முருகன் விஷ்ணுரூபியாக வழிபாடு செய்யப் படுகிறான்.

ஸம்ஹாரம் அழிவு, நாசம், நிர்மூலம் ஆகியவை பொதிந்த அகோர சக்தி. அகோர சக்தியே **ரீ**வம். எதற்கும் அழிவே இல்லை என்ற பரதத்துவம் கருதப்படும் பொழுது, இச்சக்தி மாறுபாடு அல்லது புணரமைப்பு தரும் சக்தியாக கருதப்படுகிறது. சூரஸம்ஹார நிகழ்ச்சி தீயவர்களை அழித்து, நானிலத்தை ரக்ஷிக்கும் இன்ப நிகழ்ச்சி. எனவே முருகன் சிவ அம்**ரா**மாக வணங்கப்படுகிறான்.

இன்னல்களற்ற இன்பமயமான வாழ்வினையே ஜீவராசிகள் விரும்புகின்றன. அதைத் தருவதன்றி அது பலகாலும் தொடர்ந்திடவும் வேண்டும். அதற்குப் பாது காப்பான கவசத்தை பரம புருஷனாகிய திருமுருகனே அருள இயலும். எனவே, நான்காவது பீஜ மந்திரம் மங்களங்களையும் பாதுகாப்பினையும் நாடி நிற்கும் பாங்கில் முருகனை வழிபாடு செய்திட அவசியமாகிறது.

அவனின்றி அணுவும் அசையாது. திருவருள் இன்றி துரும்பும் நகராது. ஸர்வ ஸதாகாலமும் எங்கும் நிறைந்திருக்கும் நாயகனே ஸர்வேஸ்**வ**ரனாகிய ஸதா**ரீ**வன். முருகன், விஷ்ணு, **ரீ**வன் மூவரும் ஒருங்கிணைந்த தெய்வீக மாகிய திருமுருகனே என வணங்குகிறோம்.

ஆறாவது பீஜ மந்த்ரம் ப்ரத்யேக மந்திரம். அஸ்த்ரங் களின் தொகுப்பே திவ்ய மந்த்ரமாக, அஸ்த்ரங்கள் ப்ரயோகிக்கப்பட்டால், அவை குறிக்கோளைச் சாதிக்கின்றன. பிரஹ்மாஸ்த்ரம் வீர ஹனுமானையே கட்டியது என்பது ராமாயண நிகழ்ச்சி. இது அஸ்த்ரங்களிலிருந்து எவருமே தப்ப இயலாது என்பதைக் குறிக்கிறது. **ரீ**வாஸ்த்ரம், **ரா**ரவண பவாஸ்த்ரம் ஆகியவற்றை ஆறாவது பீஜ மந்த்ரம்

ப்ரயோகித்து அருளுகிறது. கோரிய பலன்களை அடைந்திட, அற்புத தெய்வீக சாதனமாக திவ்ய அஸ்த்ரங்களை ஆண்டவனே அனுப்பி அருள் பாலிக்கிறார். மந்த்ர அமைப்பில் மெய்சிலிர்க்கும் கோர்வையாக அற்புதமாக அமைந்துள்ள இந்த பீஜ மந்த்ரம் அனைத்தையும் சாதிக்கும் ஈடு இணையற்ற அற்புத தெய்வீக மந்த்ரமாகி திகழ்வதில் வியப்பே இல்லை.

புனிதங்கள் பெருகிட, மங்களங்கள் மலர்ந்து பொங்கிட, துன்பங்கள் துவைக்கப்பட, பிணிகள் போக்கப்பட, வீணர்கள், விரோதிகள் வீழ்ந்து அழிய, செல்வங்கள் பெருக, வறுமை விலக, இந்த திரிஶாதி தொகுப்பினாலே ஸத்தியமாகும் என்பது அனுபவத்தில் கண்ட ஒரு உண்மை.

ஆசாரத்துடன் அங்கம் துலக்கி நேசமுடன் நினைவாகி தூய்மையான உள்ளம் கொண்டு பக்திப் பரிவுடன் புனித பாங்கில் பூஜை செய்திடல் வேண்டும். திருமுருகனின் திருக்கோயில்களிலும் இந்த த்ரிஶாதி பூஜையினைச் செய்திடலாம்.

நன்றி : ஸ்ரீ சுப்ரமண்ய த்ரிசதீ நாமாவளி; ஸ்ரீமதி அச்சகம், மவுண்ட் ரோடு, சென்னை - 600 002, 1976.

தொகுப்பு : இஞ்சிக் கொல்லை ப்ரம்மஸ்ரீ குஞ்சிதபாதம் ஐயர் அவர்கள்.

முத்து சுப்ரமண்ய தீக்ஷிதர்

63, தெற்கு ரதவீதி
திருச்செந்தூர்
19–01–2025

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸர்வஶத்ரு ஸம்ஹார த்ரிஶதி பூஜையைச் செய்ய வைத்த விராலிமலை மூலவர்

அன்று ஞாயிற்றுக்கிழமை, 11-2-2024. விராலிமலையில் திருப்புகழ் பாடும் அன்பர்கள் கூடிப் பாடி வழிபடும் படிவிழா வைபவத்தின் 9-வது ஆண்டு பூஜை. வழக்கமாக மூலவருக்கு அபிஷேகம், அலங்காரம் ஷண்முக அர்ச்சனை நடைபெறும். அன்று முஹூர்த்த நாள் ஆனதினால் கோவிலில் அதிகக் கூட்டம் இருந்தது. அந்த காரணத்தினால் அன்று மூலவர் ஸன்னதியில் குருக்கள் ஶத்ரு ஸம்ஹார த்ரிஶதி அர்ச்சனை செய்தார்கள்.

அடியேன் மூலவரின் அருகில், வெளிப்புறம் பக்கத்தில் இருந்து அதை உன்னிப்போடு கேட்கும் பாக்கியம் கிட்டியது. மதுரை, ஸ்ரீ-ல-ஸ்ரீ சாந்திகுமார ஸ்வாமிகளும் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் இந்த அர்ச்சனையைப் பற்றியும், அதில் பிரயோகப்படுத்தப்பட்ட பீஜாக்ஷர மந்திரங்களைப் பற்றியும் அதனுடைய உயர்வைப் பற்றியும் அடியேனிடம் குருமுகமாகி உபதேசித்தார்கள். அந்த பூஜை அமைந்த விதமும், அது அடியேனுடைய மனதில் ஏற்படுத்திய தாக்கமும், இந்த அர்ச்சனையை அனுதினமும் செய்தால் அது நம் வீட்டிற்கும் நம் நாட்டிற்கும் அதிக நன்மைகளை பகவான் அருள்வான் அல்லவா! அடியேனும் இந்த பூஜையை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் வேறூன்றி, ஒரு சில தினங்களுக்குப் பிறகு இந்த அர்ச்சனையை அனுதினமும் செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் மேலோங்கி நிற்க, அதை அடியேன் செய்ய ஆரம்பித்தேன்.

அப்பொழுது இணையத்தில் யூட்யூபில் திரு. பக்தா அவர்கள் 'எதிர்மறை எண்ணங்களை வேரோடு நீக்கி நேர்மறை எண்ணங்களை உருவாக்கும் ஶத்ரு ஸம்ஹார த்ரிஶதி' அர்ச்சனையை கேட்கும் பொழுது அவரே அனைத்து அர்ச்சனைகளை செய்பவர்களை விட நன்றாக செய்துள்ளார்

என்கிற எண்ணம் மனதில் தோன்றியதினால் அதையே குருமுகமாக எடுத்துக்கொண்டு அடியேனும் பூஜையை ஆரம்பித்துத் தொடர்ந்தேன்.

அந்த பூஜையில் சொல்லப்பட்டதோ முழுக்க முழுக்க வடமொழியான ஸம்ஸ்க்ருத்தில் உள்ள அர்ச்சனை நாமாவளிகள். அது நம் வாயிலும் எளிதில் நுழையாது. பொருளும் தெரியாது. ஆனால் அதில் ஒரு தெய்வீகத்தன்மை இருந்ததை மனதால் உணர்ந்தேன். உதாரணமாக "ஓம் நம் ஸௌம் ஈம் நம் ளம் ஸ்ரீம் **ம**ரவணபவ ஹம் ஸத்யோஜாத ஹாம் ஹ்ருதய ப்ரஹ்ம ஸ்ருஷ்டி காரண ஸுப்ரஹ்மண்ய **ம**ிவ நாதாய நமஹ:" என்று அவர் சொல்லும் போது ஒரு மலரை எடுத்து பகவானின் திருவடிகளில் ஸமர்ப்பிப்பேன் ஏகாக்ர மனதோடு. இந்த வழிபாட்டு முறை எனது குடும்பத்தில் அனைவரையும் வசப்படுத்தி விட்டமையால் அடியேன் ஓதும் போது அவர்களும் இணைந்து இந்த வழிபாட்டு முறையை செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்த வழிபாட்டு முறையின் பிரதிபலிப்பு கொஞ்சம் கொஞ்சமாக மனதில் ஊன்றி அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும். நாமாக்களின் பொருள் தெரிய வேண்டுமே என்கிற உந்துதலில் பலரிடமும் அது பற்றிப் பேசும் பொழுது அடியேனுடைய ஆத்ம நண்பர் நெல்லை ஸஹஸ்ரநாம மண்டலியின் ஸ்தாபகரான திரு. சிதம்பரம் ஐயா அவர்கள் சொன்னார்கள்; அவர்தம் குழுவில் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வடமொழியில் தேர்ச்சி பெற்ற அன்பர் திரு. ஆதித்யா கல்யாணராமன் அவர்கள் இந்த பணியை உங்களுக்காக செய்வார்கள் என்று. அடியேன் கொடுத்த எழுத்து வடிவை அவருக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் சொன்ன வாக்கு அப்படியே நிறைவேறி அது இன்று ஒரு புத்தக வடிவில் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்கின்ற நிலைக்கு வந்துள்ளது.

10-வது ஆண்டு விராலிமலை படிவிழா 26-01-2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள நிலையில் அதற்கு முன்தினம் இந்த புத்தக வெளியீடு விராலிமலையில் மஹான், ஸித்த புருஷர் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள் அதிஷ்டானத்தில் வெளியிட விராலிமலை ஷண்முகப் பெருமான் சித்த மிட்டுள்ளார் போலும்.

"எந்த காரியம் செய்தாலும், 'ஏன் செய்கிறாய்? எதற்கு செய்கிறாய்?' என்று கேள்விகளை கேட்டுக் கொண்டே செய்ய வேண்டும்." என்பார் திருப்புகழில் மகான் அருணகிரிநாதர் - தலைவலி மருத்தீடு எனத் தொடங்கும் பழநிமலைப் பாடலில். அந்த வழியைப் பின்பற்றும் நாம் இந்த வழிபாட்டு முறை வீட்டிற்கும், நாட்டிற்கும் அளப்பரிய நன்மைகளை கொடுக்கும் என்பதால், அதை அனைவரும் பின்பற்றினால் அவர் களுக்கும் நல்லது நடக்கும். அவர்கள் குடும்பத்திலும், அவர்கள் ஊரிலும், அவர்கள் நாட்டில் நிலவி வரும் எதிர்மறை எண்ணங்களை அழித்து நேர்மறை எண்ணங்களை வளர்த்து இந்த பூஜை முறை அளப்பரிய நன்மைகளை கொடுக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் உறுதியாக தெரிகின்றது.

இன்று நம் நாட்டில், பல கோணங்களில் இருந்தும் மாறுபட்ட கருத்தை உடையவர்கள், அமைதியை குறைக்க, விரோதத்தை வளர்க்க, உலகம் முழுவதும் இந்த விஷம், கலிகாலத்தில் இமயமலையன்ன பெரிதாகி உள்ளது. இந்த கொடுமையான நிலை மாற, அன்பும், அவிரோதமும் வளர இந்த பிரார்த்தனை முறை அமையும். இந்த புத்தகத்தைப் பெற்ற எல்லோரும் அவர்கள் விரும்பக்கூடிய ஒரு தினத்தில் வீடு செழிக்க நாடு செழிக்க இந்த பிரார்த்தனை முறையை பின்பற்றினால் அது விரோதத்தை அழித்து அவிரோதத்தை வளர்க்கும். இந்த ஒரு நிலை ஏற்படும் பொழுது ஆனந்தம். அது பேரானந்தமாக மாறி பிரபஞ்சம் எங்கும் பரமானந்தமாக

பரிமளிக்கும். அந்த நிலை, நம்முடைய குருநாதர் போதித்த அன்பும் அவிரோதமும், வாழ்க்கையில் முக்கியப் பொருளாகி உலகெங்கும் உள்ள பிரபஞ்சம் முழுவதும் பரவி உள்ள உயிரினங்களுக்கு பெருவாழ்வு நல்கும் என்பதில் ஐயமில்லை. ஆகையினால் பகவான் இந்த வழிபாட்டு முறையை அனைவரும் பின்பற்ற அருள் புரியட்டும்.

திருப்புகழ் அன்பன்

ஸ்ரீ ஸுப்3ரஹ்மண்ய மந்த்ர ஸம்மேளன த்ரிஶதீ

அத2வா

ஸ்ரீ ஶத்ருஸம்'ஹார ஶிவஸுப்3ரஹ்மண்ய த்ரிஶதி

ஸ்ரு'ஷ்டி–ஸ்தி2தி–ஸம்'ஹார–திரோதா4ன–அனுக்3ரஹ–
பஞ்சக்ரு'த்ய–பஞ்சப்3ரஹ்ம–ஹ்ரு'த3யாத்3யங்க3–
ஶிவபஞ்சாக்ஷர–அகாராதி3க்ஷகாராந்தமாத்ரு'கா–வர்ண'–
ஸபீ3ஜ மூலமந்த்ர ஸம்மேலனாத்மக– ஸ்ரீ ஸுப்3ரஹ்மண்ய
ஸர்வஶத்ருஸம்'ஹார – த்ரிஶத்யர்சனா ||

வந்தே3 கு3ரும்' க3ணபதிம்' ஸ்கந்த3மாதி3த்யமம்பி3காம் |
து3ர்கா3ம் ஸரஸ்வதீம் லக்ஷ்மீம் ஸர்வகார்யார்த2ஸித்3த4யே ||

மஹாஸேனாய வித்3மஹே ஷடா3ननாய தீ4மஹி |
தன்ன: ஸ்கந்த3: ப்ரசோத3யாத் ||

நகாராதி3நாமானி 50

ஓம் நம்' ஸௌம்' ஈம்' நம்' ளம்' ஸ்ரீம்' ஶரவணப4வ ஹம்'
ஸத்3யோஜாத ஹாம்' ஹ்ரு'த3ய–ப்3ரஹ்ம–
ஸ்ரு'ஷ்டிகாரண– ஸுப்3ரஹ்மண்ய

(இதி மூலம்' ப்ரதிநாம யோஜயேத்)

ஶிவ–நாதா2ய நம: |
நிர்லேபாய நம: |
நிர்மமாய நம: |
நிஷ்களாய நம: |
நிர்மோஹாய நம: | 5

நிர்மலாய நம: |
நிர்விகாராய நம: |

நிராபா[4]ஸாய நம: |
நிர்விகல்பாய நம: |
நித்யத்ரு'ப்தாய நம: | 10

நிவ்ரு'த்தகாய நம: |
நிருபத்[3]ரவாய நம: |
நிதீ[4]ஶாய நம: |
நிர்மமப்ரியாய நம: |
நித்யயோகி[3]னே நம: | 15

நித்யஶுத்[3]தா[4]ய நம: |
நிதீ[4]னாம்பதயே நம: |
நித்யநியமாய நம: |
நிஷ்காரணாய நம: |
நிஸ்ஸங்கா[3]ய நம: | 20

நிதி[4]ப்ரியாய நம: |
நித்யப்[4]ரு'தே நம: |
நித்யவஸ்துனே நம: |
நித்யானந்த[3]கு[3]ரவே நம: |
நித்யகல்யாணாய நம: | 25

நிதா[4]த்ரே நம: |
நிராமயாய நம: |
நித்யயோகி[3]ஸாக்ஷிப்ரியவாதா[3]ய நம: |
நாகே[3]ந்த்[3]ரஸேவிதாய நம: |
நாரதோ[3]பதே[3]ஶகாய நம: | 30

நக்[3]னரூபாய நம: |
நானாபாபத்[4]வம்'ஸினே நம: |
நாக[3]பீட[2]ஸ்தா[2]ய நம: |

நாதா^{3}ந்தகு^{3}ரவே நம: |
நாக^{3}ஸுதகு^{3}ரவே நம: | 35

நாத^{3}ஸாக்ஷிணே நம: |
நாக^{3}பாஶஹராய நம: |
நாகா^{3}ஸ்த்ரத^{4}ராய நம: |
நடனப்ரியாய நம: |
நந்தி^{3}த்^{4}வஜினே நம: | 40

நவரத்னபாது^{3}காபாதா^{3}ப்^{3}ஜாய நம: |
நடேஶப்ரியாய நம: |
நவவைடூ^{3}ர்யஹாரகேயூரகுண்ட^{3}லாய நம: |
நிமிஷாத்மனே நம: |
நித்யபு^{3}த்^{3}தா^{4}ய நம: | 45

நமஸ்காரப்ரியாய நம: |
நாத^{3}பி^{3}ந்து^{3}கலாமூர்தயே நம: |
நித்யகௌமாரவீரபா^{3}ஹவே நம: |
நித்யானந்த^{3}தே^{3}ஶிகாய நம: |
நகாராத்^{3}யந்தஸம்பூர்ணாய நம: | 50

மகாராதி^{3}நாமானி 50

ஓம் மம்' ஸௌம்' ஈம்' நம்' ளம்' ஹ்ரீம்' ரவணப^{4}வஶ
ஹிம்' வாமதே^{3}வ ஹ்ரீம்' ஶிரோ– விஷ்ணு–
ஸ்தி^{2}திகாரண– ஸுப்^{3}ரஹ்மண்ய

(இதி மூலம்' ப்ரதிநாம யோஜயேத் |)

மஹாப^{3}லாய நம: |
மஹோத்ஸாஹாய நம: |
மஹாபு^{3}த்^{3}த^{4}யே நம: |

மஹாபா^{3}ஹவே நம: |
மஹாமாயாய நம: | 55

மஹாத்^{3}யுதயே நம: |
மஹாத^{4}னுஷே நம: |
மஹாபா^{3}ணாய நம: |
மஹாகே^{2}டாய நம: |
மஹாஶூலாய நம: | 60

மஹாத^{4}னுர்த^{4}ராய நம: |
மஹாமயூராரூடா^{4}ய நம: |
மஹாதே^{3}வப்ரியாத்மஜாய நம: |
மஹாஸத்த்வாய நம: |
மஹாஸௌம்யாய நம: | 65

மஹாஶக்தயே நம: |
மஹாமாயாஸ்வரூபாய நம: |
மஹானுபா^{4}வாய நம: |
மஹாப்ரப^{4}வே நம: |
மஹாகு^{3}ரவே நம: | 70

மஹாரஸாய நம: |
மஹாரதா^{2}ரூடா^{4}ய நம: |
மஹாபா^{4}கா^{3}ய நம: |
மஹாமகுடாய நம: |
மஹாகு^{3}ணாய நம: | 75

மந்தா^{3}ரஶோக^{2}ராய நம: |
மஹாஹாராய நம: |
மஹாமாதங்க^{3}க^{3}மனாய நம: |
மஹாஸங்கீ^{3}தரஸிகாய நம: |
மது^{4}பானப்ரியாய நம: | 80

மது[4]ஸூத[3]னப்ரியாய நம: |
மஹாப்ரஸ்தாய நம: |
மஹாவ்யக்தயே நம: |
மஹாவக்த்ராய நம: |
மஹாயஸே நம: | 85

மஹாமாத்ரே நம: |
மஹாமணிக[3]ஜாரூடா[4]ய நம: |
மஹாத்மனே நம: |
மஹாஹவிஷே நம: |
மஹிமாகாராய நம: | 90

மஹாமார்கா[3]ய நம: |
மதோ[3]ன்மத்தபை[4]ரவபூஜிதாய நம: |
மஹாவள்ளீப்ரியாய நம: |
மத[3]னாகாரவல்லபா[4]ய நம: |
மந்தா[3]ரகுஸுமப்ரியாய நம: | 95

மாம்'ஸாகர்ஷணாய நம: |
மண்ட[3]லத்ரயவாஸினே நம: |
மஹாபோ[4]கா[3]ய நம: |
மஹாஸேனான்யே நம: |
மகாராத்[3]யந்தஸம்பூர்ணாய நம: || 100

ரிகாராதி[3]நாமானி 50

ஓம் ரிம்' ஸௌம்' ஈம்' நம்' ளம்' க்லீம்' வணப[4]வஸ்வர
ஹும்' அகோ[4]ர ஹ்ரூம்' ரிகா[2]–ருத்[3]ர–
ஸம்'ஹாரகாரண–ஸுப்[3]ரஹ்மண்ய

(இதி மூலம்' ப்ரதிநாம யோஜயேத் |)

ஶிவானந்த^{3}கு^{3}ரவே நம: |
ஶிவஸச்சிதா^{3}னந்த^{3}ஸ்வரூபாய நம: |
ஶிக^{2}ண்டி^{3}மண்ட^{3}லாவாஸாய நம: |
ஶிவப்ரியாய நம: |
ஶரவணோத்^{3}பூ^{4}தாய நம: | 105

ஶிவபக்திவத^{3}னாய நம: |
பங்கரப்ரியஸுதாய நம: |
பூரபத்^{3}மாஸுரத்^{3}வேஷிணே நம: |
பூரபத்^{3}மாஸுரஹந்த்ரே நம: |
பூராங்க^{3}த்^{4}வம்'ஸினே நம: | 110

பூக்லரூபாய நம: |
பூத்^{3}தா^{4}யுத^{4}த^{4}ராய நம: |
பூத்^{3}த^{4}வீரப்ரியாய நம: |
பூத்^{3}த^{4}வீரயுத்^{3}த^{4}ப்ரியாய நம: |
பூத்^{3}த^{4}மானஸநிலயாய நம: | 115

பூன்யஷட்கவர்ஜிதாய நம: |
பூத்^{3}த^{4}தத்த்வஸம்பூர்ணாய நம: |
பங்க^{2}சக்ரகுலிபத்^{4}வஜரேகா^{2}ங்க்^{4}ரிபங்கஜாய நம: |
பூத்^{3}த^{4}யோகி^{3}னீக^{3}ணதா^{3}த்ரே நம: |
போகபர்வதத^{3}ம்'ஷ்ட்ராய நம: | 120

பூத்^{3}த^{4}ரணப்ரியபண்டி^{3}தாய நம: |
பரப^{4}வேகா^{3}யுத^{4}த^{4}ராய நம: |
பரபதயே நம: |
பாகினீ டா^{3}கினீ ஸேவிதபாதா^{3}ப்^{3}ஜாய நம: |
பங்க^{2}பத்^{3}மநிதி^{4} ஸேவிதாய நம: | 125

பதஸஹஸ்ராயுத^{4}த^{4}ரமூர்தயே நம: |
ஶிவபூஜகமானஸநிலயாய நம: |

ஸ்ரிவதீ^{3}க்ஷாகு^{3}ரவே நம: |
ஸுரவாஹனாதி^{4}ரூடா^{4}ய நம: |
ஸோகரோக^{3}நிவாரணாய நம: | 130

ஸுசயே நம: |
ஸுத்^{3}தா^{4}ய நம: |
ஸுத்^{3}த^{4}கீர்தயே நம: |
ஸுசிஸ்ரவஸே நம: |
ஸக்தயே நம: | 135

ஸத்ருக்ரோத^{4}விமர்த^{3}னாய நம: |
ஸ்வேதப்ரபா^{4}ய நம: |
ஸ்வேதமூர்தயே நம: |
ஸ்வேதாத்மகாய நம: |
ஸாரணகுலாந்தகாய நம: | 140

ஸதமூர்தயே நம: |
ஸதாயுதா^{4}ய நம: |
ஸரீரத்ரயநாயகாய நம: |
ஸுப^{4}லக்ஷணாய நம: |
ஸுபா^{4}ஸுப^{4}வீக்ஷணாய நம: | 145

ஸுக்ரஸோணிதமத்^{4}யஸ்தா^{2}ய நம: |
ஸுண்டா^{3}த^{3}ண்ட^{3}பூ^{2}த்காரஸோத^{3}ராய நம: |
ஸுன்யமார்க^{3}தத்பரஸேவிதாய நம: |
ஸாஸ்வதாய நம: |
ஸிகாராத்^{3}யந்தஸம்பூர்ணாய நம: | 150

வகாராதி[3]நாமானி 50

ஓம் வம்' ஸௌம்' ஈம்' நம்' ளம்' ஐம்' ணப[4]வஸரவ
ஹேம்' தத்புருஷ ஹைம்' மஹேஶ்வர–
திரோபா[4]வகாரண–ஸுப்[3]ரஹ்மண்ய

(இதி மூலம்' ப்ரதிநாம யோஜயேத்)

வல்லீமானஸஹம்'ஸிகாய நம: |
விஷ்ணவே நம: |
விது[3]ஷே நம: |
வித்[3]வஜ்ஜனப்ரியாய நம: |
வேலாயுத[4]த[4]ராய நம: | 155

வேக[3]வாஹனாய நம: |
வாமதே[3]வமுகோ[2]த்பன்னாய நம: |
விஜயகர்த்ரே நம: |
விஶ்வரூபாய நம: |
விந்த்[4]யஸ்கந்தா[3]த்[3]ரினடனப்ரியாய நம: | 160

விஶ்வபே[4]ஷஜாய நம: |
வீரஶக்திமானஸநிலயாய நம: |
விமலாஸனோத்க்ரு'ஷ்டாய நம: |
வாக்[3]தே[3]வீநாயகாய நம: |
வெளஷட[3]ந்தஸம்பூர்ணாய நம: | 165

வாசாமகோ[3]சராய நம: |
வாஸநாக[3]ந்த[4]த்[3]ரவ்யப்ரியாய நம: |
வாத[3]போ[3]த[4]காய நம: |
வாத[3]வித்[3]யாகு[3]ரவே நம: |
வாயுஸாரத்[2]யமஹாரதா[2]ரூடா[4]ய நம: | 170

வாஸுகிஸேவிதாய நம: |
வாதுலாக[3]மபூஜிதாய நம: |

விதி^{4}ப^{3}ந்த^{4}னாய நம: |
விஶ்வாமித்ரமக^{2}ரக்ஷிதாய நம: |
வேதா^{3}ந்தவேத்^{3}யாய நம: | 175

வீதராக^{3}ஸேவிதாய நம: |
வேத^{3}சதுஷ்டயஸ்துத்யாய (ஸ்துதாய) நம: |
வீரப்ரமுக^{2}ஸேவிதாய நம: |
விஶ்வபோ^{4}க்த்ரே நம: |
விஶாம்' பதயே நம: | 180

விஶ்வயோனயே நம: |
விஶாலாக்ஷாய நம: |
வீரஸேவிதாய நம: |
விக்ரமோபரிவேஷாய நம: |
வரதா^{3}ய நம: | 185

வரப்ரதா^{3}னாம்' ஶ்ரேஷ்டா^{2}ய நம: |
வர்த^{4}மானாய நம: |
வாரிஸுதாய நம: |
வானப்ரஸ்தா^{2}ய நம: |
வீரபா^{3}ஹ்வாதி^{3}ஸேவிதாய நம: | 190

விஷ்ணுப்^{3}ரஹ்மாதி^{3}பூஜிதாய நம: |
வீராயுத^{4}ஸமாவ்ரு'தாய நம: |
வீரஶ்ரமர்த^{3}னாய நம: |
வ்யாஸாதி^{3}முனிபூஜிதாய நம: |
வ்யாகரணாதி^{3}ஶாஸ்த்ரனவோத்க்ரு'ஷ்டாய நம: | 195

விஶ்வதோமுகா^{2}ய நம: |
வாஸவாதி^{3}பூஜிதபாதா^{3}ப்^{3}ஜாய நம: |
வஸிஷ்ட^{2}ஹ்ரு'த^{3}யாம்போ^{4}ஜநிலயாய நம: |

வாஞ்சி[2]தார்த[2]ப்ரதா[3]ய நம: |
வகாராத்[3]யந்தஸம்பூர்ணாய நம: | 200

யகாராதி[3]நாமானி 50

ஓம் யம்' ஸௌம்' ஈம்' நம்' ளம்' ஸௌ: ப[4]வஸ்ரவண
ஹோம்' ஈஸ்ரான ஹௌளம்' நேத்ரத்ரய–
ஸதா[3]ஸிவானுக்[3]ரஹகாரண–ஸுப்[3]ரஹ்மண்ய

(இதி மூலம்' ப்ரதிநாம யோஜயேத்) |

யோகி[3]ஹ்ரு'த்பத்[3]மவாஸினே நம: |
யாஜ்ஞிகவர்தி[4]னே நம: |
யஜநாதி[3] ஷட்கர்மதத்பராய நம: |
யஜுர்வேத[3]ஸ்வரூபாய நம: |
யஜுஷே நம: | 205

யஜ்ஞேஸ்ராய நம: |
யஜ்ஞஸ்ரியே நம: |
யஜ்ஞராஜே நம: |
யஜ்ஞபதயே நம: |
யஜ்ஞமயாய நம: | 210

யஜ்ஞபூ[4]ஷணாய நம: |
யஜ்ஞப[2]லதா[3]ய நம: |
யஜ்ஞாங்க[3]பு[4]வே நம: |
யஜ்ஞபூ[4]தாய நம: |
யஜ்ஞஸம்'ரக்ஷிணே நம: | 215

யஜ்ஞபண்டி[3]தாய நம: |
யஜ்ஞவித்[4]வம்'ஸினே நம: |
யஜ்ஞமேஷக[3]ர்வஹராய நம: |

యజమానస్వరూపాయ నమ: |
యమాయ నమ: | 220

యమత^{4}ర్మపూజితాయ నమ: |
యమాత్^{3}యష్టాంగ^{3}ஸாத^{4}காய நம: |
யுத்^{3}த^{4}க^{3}ம்பீ^{4}ராய நம: |
யுத்^{3}த^{4}ஹரணாய நம: |
யுத்^{3}த^{4}நாதா^{2}ய நம: | 225

யுகா^{3}ந்தக்ரு'தே நம: |
யுகா^{3}வ்ரு'த்தாய நம: |
யுக^{3}நாதா^{2}ய நம: |
யுக^{3}த^{4}ர்மப்ரவர்தகாய நம: |
யுக^{3}மாலாத^{4}ராய நம: | 230

யோகி^{3}னே நம: |
யோக^{3}வரதா^{3}ய நம: |
யோகி^{3}னாம்' வரப்ரதா^{3}ய நம: |
யோகீ^{3}ஶாய நம: |
யோகா^{3}னந்தா^{3}ய நம: | 235

யோக^{3}போ^{4}கா^{3}ய நம: |
யோகா^{3}ஷ்டாங்க^{3}ஸாக்ஷிணே நம: |
யோக^{3}மார்க^{3}தத்பரஸேவிதாய நம: |
யோக^{3}யுக்தாய நம: |
யோக^{3}புருஷாய நம: | 240

யோக^{3}நித^{4}யே நம: |
யோக^{3}விதே^{3} நம: |
யோக^{3}ஸித்^{3}தி^{4}தா^{3}ய நம: |
யுத்^{3}த^{4}ஶத்ருப^{4}யங்கராய நம: |
யுத்^{3}த^{4}ஶோகமர்த^{3}னாய நம: | 245

யஶஸ்வினே நம: |
யஶஸ்கராய நம: |
யந்த்ரிணே நம: |
யந்த்ரநாயகாய நம: |
யகாராத்^{3}யந்தஸம்பூர்ணாய நம: | 250

மாத்ரு'காக்ஷராதி^{3}நாமானி 50

ஓம் நம: ஶிவாய ஸௌம்' ஈம்' நம்' ளம்' ஹ்ரீம்' ஹ்ரீம்' க்லீம்' ஐம்' ஸௌ: வஶரவணப^{4} ஹும்' அதோ^{4}முக^{2} ஹு: அஸ்த்ர–பரப்^{3}ரஹ்ம–பஞ்சக்ரு'த்யகாரண ஸுப்^{3}ரஹ்மண்ய

(இதி மூலம்' ப்ரதிநாம மாத்ரு'காபீ^{3}ஜமனு யோஜயேத்)|

அம்' மூலம்' அஸ்த்ரஶிவாஸ்த்ர பாஶுபத வைஷ்ணவ ப்^{3}ரஹ்மாஸ்த்ரத்^{4}ரு'தே நம: |
ஆம்' ஆனந்த^{3}ஸுந்த^{3}ராகாராய நம: |
இம்' இந்த்^{3}ராணீமாங்க^{3}ல்யரக்ஷகாய நம: |
ஈம்' ஈஷணாத்ரயவர்ஜிதாய நம: |
உம்' உமாஸுதாய நம: | 255

ஊம்' ஊர்த்^{4}வரேத: ஸுதாய நம: |
ரு'ம்' ரு'ணத்ரயவிமோசனாய நம: |
ரூ'ம்' ரு'தம்ப^{4}ராத்மஜ்யோதிஷே நம: |
லு'ம்' லுப்தாசாரமனோதூ^{3}ராய நம: |
லூ'ம்' லூதபா^{4}வபாஶுபே^{4}தி^{3}னே நம: | 260

ஏம்' ஏணாங்கத^{4}ரஸத்புத்ராய நம: |
ஐம்' ஐஶானபத^{3}ஸந்தா^{3}யினே நம: |
ஓம்' ஓங்காரார்த^{2}ஶ்ரீமத்^{3}கு^{3}ரவே நம: |
ஔம்'ஔளன்னத்யப்ரதா^{3}யகாய நம: |
அம்' அஸ்த்ரகுக்குடக்ஷுரிகாவ்ரு'ஷப^{4}ஶுத்^{3}தா^{4}ஸ்த்ரத^{4}ராய நம: | 265

அ: அத்[3]வைதபரமானந்த[3]சித்[3]விளாஸமஹாநித[4]யே நம: |

கம்' கார்யகாணநிர்முக்தாய நம: |

க[2]ம்' க[2]ண்டே[3]ந்து[3]மௌளிதனயாய நம: |

க[3]ம்' க[3]த்[3]யபத்[3]யப்ரீதிஜ்ஞாய நம: |

க[4]ம்' க[4]னக[3]ம்பீ[4]ரபூ[4]ஷணாட்[4]யாய நம: | 270

ங்ம்' ங்காராகாரகத்[3]வந்த்[3]வஸர்வஸந்த்[4]யா(ஆ)த்மசின்மயாய நம: |

சம்' சிதா[3]னந்த[3]மஹாஸிந்து[4]மத்[4]யரத்னஸிகா[2]மணயே நம: |

ச[2]ம்' சே[2]தி[3]தாஸேஷதை[3]த்யௌகா[4]ய நம: |

ஜம்' ஜராமரணநிவர்தகாய நம: |

ஜ[2]ம்' ஜ[2]ல்லரீவாத்[3]யஸுப்ரியாய நம: | 275

ஞம்' ஜ்ஞானோபதே[3]ஸகர்த்ரே நம: |

டம்' டங்கிதாகி[2]லலோகாய நம: |

ட[2]ம்' ட[2]காரமத்[4]யநிலயாய நம: |

ட[3]ம்' ட[3]க்காணிநாத[3]ப்ரீதிகராய நம: |

ட[4]ம்' டா[4]லிதாஸுரகுலாந்தகாய நம: | 280

ண்ம்' ணபி[3]ந்து[3]த்ரயவன்மத்[4]யபி[3]ந்த்[3]வாஸ்லிஷ்ட ஸுவல்லிகாய நம: |

தம்' தும்பு[3]ருநாரதா[3]ர்சிதாய நம: |

த[2]ம்' ஸ்தூ[2]லஸூக்ஷ்மப்ரத[3]ர்ஸகாய நம: |

த[3]ம்' தா[3]ந்தாய நம: |

த[4]ம்' த[4]னுர்பா[3]ணனாராசாஸ்த்ரத[4]ராய நம: | 285

ந்ம்' நிஷ்கண்டகாய நம: |

ப்ம்' பிண்டி[3]பாலமுஸலத[3]ண்ட[3]க[2]ட்[3]க[3]கே[2]டகத[4]ராய நம: |

ப[2]ம்' ப[2]ணிலோகவிபூ[4]ஷணாய நம: |

ப[3]ம்' ப[3]ஹுதை[3]த்யவிநாஸகாய நம: |

ப^{4}ம்' ப^{4}க்தஸாலோக்யஸாரூப்யஸாமீப்யஸாயுஜ்யதா^{3}யினே
நம: | 290

மம்' மஹாமாக்திமாலக^{3}தா^{3}பரமாபாமாங்குமாத்^{4}ரு'தே நம: |
யம்' யந்த்ரதந்த்ரபே^{4}தி^{3}னே நம: |
ரம்' ரஜஸ்ஸத்த்வகு^{3}ணான்விதாய நம: |
லம்' லோகாதீதகு^{3}ணோபேதாய நம: |
வம்' விகல்பபரிவர்ஜிதாய நம: | 295

மாம்' மாங்க^{2}சக்ரகுலிமாத்^{4}வஜ்ர^{4}ராய நம: |
ஷம்' ஷட்சக்ரஸ்தா^{2}ய நம: |
ஸம்' ஸர்வமந்த்ரார்த^{2}ஸர்வஜ்ஞத்வமுக்^{2}யபீ^{3}ஜஸ்வரூபாய நம: |
ஹம்' ஹ்ரு'த^{3}யாம்பு^{3}ஜமத்^{4}யஸ்த^{2}விரஜவ்யோமநாயகாய நம: |
ளம்' லோகைகநாதா^{2}ய நம: || 300 ||

க்ஷம்' ஏகபஞ்சத^{3}மா(ஞ்சாமாத^{3}ர)க்ஷரஸம்பூர்ணாய நம: |

அம்' ஆம்' இம்' ஈம்' உம்' ஊம்' ரு'ம்' ரூ'ம்' ல்ரு'ம்' ல்ரூ'ம்'
ஏம்' ஐம்' ஓம்' ஔளம்' அம்' அ:

கம்' க^{2}ம்' க^{3}ம்' க^{4}ம்' ஙம்'
சம்' ச^{2}ம்' ஜம்' ஜ^{2}ம்' ஞம்'
டம்' ட^{2}ம்' ட^{3}ம்' ட^{4}ம்' ணம்'
தம்' த^{2}ம்' த^{3}ம்' த^{4}ம்' நம்'
பம்' ப^{2}ம்' ப^{3}ம்' ப^{4}ம்' மம்'
யம்' ரம்' லம்' வம்'
மாம்' ஷம்' ஸம்' ஹம்' ளம்' க்ஷம்' நம:

மாிவாய வப^{4}ணவரமா ஹம்' ஹிம்' ஹூம்' ஹேம்' ஹோம்' ஹம்'
ஸத்^{3}யோஜாத – வாமதே^{3}வ – அகோ^{4}ர – தத்புருஷ –
ஈமான – அதோ^{4}முக^{2}–
ஹாம்' ஹீம்' ஹூம்' ஹைம்' ஹௌளம்' ஹ:
ஹ்ரு'த^{3}ய–மாிர:–மாிகா^{2}–கவச–

நேத்ரத்ரய – அஸ்த்ர–ப்^{3}ரஹ்ம–விஷ்ணு–ருத்^{3}ர–
மஹேஶ்வர–ஸதா^{3}ஶிவ– பரப்^{3}ரஹ்ம–ஸ்ரு'ஷ்டி–ஸ்தி^{2}தி–
ஸம்'ஹார–திரோபா^{4}வ–

அனுக்^{3}ரஹ–பஞ்சக்ரு'த்யகாரணாய ஜக^{3}த்^{3}பு^{4}வே வசத்^{3}பு^{4}வே
விஶ்வபு^{4}வே ருத்^{3}ரபு^{4}வே ப்^{3}ரஹ்மபு^{4}வே அக்^{3}னிபு^{4}வே

லம்' வம்' ரம்' யம்' ஹம்' ஸம்' ஸர்வாத்மகாய
ஓம் ஹ்ரீம்' வ்ரீம்' ஸௌ: ஶரவணப^{4}வ ஓம் ஸர்வலோகம்'
மம வஶமானாய மம ஶத்ருஸங்க்ஷோப^{4}ணம்' குரு குரு மம
ஶத்ரூந்நாஶய நாஶய, மம ஶத்ரூன்மாரய மாரய
ஷண்முகா^{2}ய மயூரவாஹனாய ஸர்வராஜப^{4}யநாஶனாய
ஸ்கந்தே^{3}ஶ்வராய வப^{4}ணவரஶ க்ஷாம்' க்ஷீம்' க்ஷூம்' க்ஷைம்
க்ஷௌளம் க்ஷ: ஹ்ரூம்' ப^{2}ட் ஸ்வாஹா நம: |

| இதி ஶ்ரீ ஸுப்^{3}ரஹ்மண்ய மந்த்ர ஸம்மேளன த்ரிஶதீ ஸம்பூர்ணா |

| ஸ்ரீ ஸுப்3ரஹ்மண்ய மந்த்ரஸம்மேளந த்ரிஶதீ |

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் மந்த்ரங்களின்
ஒன்றிணைந்த முந்நூறு நாமங்கள்

ஶிவபெருமானின் ஆறு திருமுகங்களாய் விளங்கும் ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈ**ஶா**னம் மற்றும் (கீழ்நோக்கியுள்ள) அதோமுகம் ஆகிய முகங்களின் நெற்றிக்கண்களில் இருந்து உண்டான தீப்பொறிகளில் தோன்றியவரே ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமியான முருகப் பெருமான். ஆறு முகங்கள் கொண்ட ஷண்முகராம் முருகப் பெருமானை, ஆறாவது திதியாக வரும் ஷஷ்டி தினத்தில் விரதம் இருந்து வழிபடுபவர்களுக்கு கேட்ட வரங்கள் எல்லாம் கிடைக்கும் என்பது நிதர்சனம். அந்த ஷஷ்டி விரதத்தில் மிகவும் முக்கியமானது, ஆறு விதமான எதிரிகளிடமிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள முருகப்பெருமானை வழிபடுவதாகும். அந்த ஆறு எதிரிகளாவன காமம் (முறை தவறிய ஆசை), க்ரோதம் (அளவுக்கு அதிகமான கோபம்), லோபம் (கஞ்சத்தனம்), மோஹம் (பொய்யை உண்மையென நினைக்கும் மயக்கம்), மதம் (தற்பெருமை), மாத்ஸர்யம் (பொறாமை குணம்) என்பன. அவற்றை ஷண்முகர் ஸம்ஹாரம் செய்கிறார். இந்த ஸூக்ஷ்மத்தை உணர்த்துவதே **ஶி**ரஸம்ஹாரம். இவ்வாறு நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள எதிரிகளை அழிக்க வேண்டி செய்யப் படுவது தான் இந்த ஸ்ரீ ஸுப்3ரஹ்மண்ய மந்த்ரஸம்மேளந த்ரி**ஶ**தீ அர்ச்சனை. இந்த அர்ச்சனை ஆறு பகுதிகளாக அமைந்திருக்கின்றது. முதல் ஐந்து பகுதிகளும் சிவபெருமானின் பஞ்சாக்ஷரமான நம: **ஶி**வாய மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்துக்களையும் கொண்டு தொடங்குகின்றது. ஒரு எழுத்துக்கு 50 திருநாமங்கள் வீதம் 250 திருநாமங்கள் அமைந்திருக்கின்றன. இவ்வைந்தும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைப் புரியக்கூடிய பஞ்சப்ரஹ்மங்களான ப்ரஹ்மா, விஷ்ணு,

ருத்ரன், ஈஶ்வரன், ஸதாஶிவன் ஆகிய மூர்த்திகளையும் குறிக்கின்றது. சிவபெருமானின் ஐந்து திருமுகங்களாய் விளங்கக்கூடிய ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈஶானம் ஆகியவற்றையும் குறிக்கின்றது. நிறைவாக அமையக்கூடிய 50 நாமங்கள், அன்னை ஆதிபராஶக்தியின் 51 ஶக்தி பீடங்களாய் விளங்கும் 51 அம்பிகைகளின் மாத்ருகா அக்ஷரங்களில், அவற்றை முதலாகக் கொண்டு அமைந்திருக்கின்றன. அதுவே அதோமுகத்தையும் குறிக்கிறது. இந்த 300 நாமங்களைக் கொண்டு முருகப்பெருமானுக்கு அர்ச்சனை செய்பவர்கள் அக எதிரிகள் மற்றும் புறஎதிரிகளின் தொந்தரவுகளில் இருந்து விடுபட்டு, முருகப்பெருமானிடம் அகலாத பேரன்பினையும், பக்தியையும் பெறுவார்கள் என்பது திண்ணம். இந்த நாமங்களின் பொருளானது ஆழமானதாக விளங்குகின்றது. ஒரே நாமத்திற்கு பல பரிணாமங்களில், பல பொருள் படும்படியாக அமைந்திருக்கின்றது. யோக ஶாஸ்த்ர ரீதியாகவும், தந்த்ர சாஸ்திர ரீதியாகவும் பல பொருள்படும்படி நாமங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால், இங்கு மிகவும் சுருக்கமான மேலோட்டமான பொருளே வழங்கப் பட்டிருக்கின்றது. தேவையான இடங்களில் சுருக்கமான விளக்கங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. பக்தர்கள் யாவரும் இந்த த்ரிஶதியின் பொருளுணர வேண்டும் என்பதற்காக, இந்நூல் வெளியிடப்படுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

குறிப்பு: இந்த ஶத்ருஸம்ஹார அர்ச்சனையை செய்யும் போது, பல மூல மந்திரங்கள் அமைந்திருக்கின்றதால், குரு உபதேசத்தோடு குருநாதரின் அனுமதியோடு முறைப்படி பாராயணம் செய்வதே முழுமையான பலனைக் கொடுக்கும். அவ்வாறு இல்லாமல், பாராயணம் செய்ய விரும்புபவர்கள், மூல மந்திரங்களை விட்டு, நாமங்களையோ, அதன் பொருளையோ உணர்ந்து அனுபவிக்கலாம். 'எதிரி அழிய வேண்டும். நாசமாக வேண்டும்.' என்பது போன்ற கடினமான மனோபாவங்களை மாற்றிக் கொண்டு, "எதிரிகளும்,

துஷ்டர்களும் திருந்தி நல்வாழ்வு வாழவேண்டும்" என்னும் பரந்த உள்ளத்தோடு பாராயணம் செய்வதே அனைவருக்கும் நன்மை பயக்கும்.

ஸ்ரு'ஷ்டி–ஸ்தி^{2}தி–ஸம்'ஹார–திரோதா^{4}ன–அனுக்^{3}ரஹ–
பஞ்சக்ரு'த்ய–பஞ்சப்^{3}ரஹ்ம–ஹ்ரு'த^{3}யாத்^{3}யங்க^{3}–
ஶ்ரீவபஞ்சாக்ஷர–அகாராதி^{3}க்ஷகாராந்தமாத்ரு'கா–வர்ண'–
ஸபீ^{3}ஜ மூலமந்த்ர ஸம்மேலனாத்மக– ஸ்ரீ ஸுப்^{3}ரஹ்மண்ய
ஸர்வஶத்ருஸம்'ஹார – த்ரிஶத்யர்சனா ||

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் செய்யும் (ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈஶ்வரன், ஸதா**ஶி**வன் எனும்) பஞ்சப்ரஹ்ம - ஹிருதயம் முதலான அங்கங்களோடு கூடிய **ஶ்ரீ**வபஞ்சாக்ஷர, அ முதல் க்ஷ வரை உள்ள மாத்ருகா வர்ணங்கள் - பீஜங்களோடு கூடிய மூல மந்திரங்களின் சேர்க்கையான- ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமியின் ஸர்வ**ஶ**த்ருஸம்ஹார (காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் ஆகிய ஆறு எதிரிகளையும் டம்பா, அஹங்கார, அஸூயா முதலிய எல்லா **ஶ**த்ருக்களையும் ஸம்ஹாரம் செய்யும் / அழித்து நம்மைக் காக்கும்) த்ரி**ஶ**த்யர்சநா (முந்நூறு நாமங்களின் அர்ச்சனை)

வந்தே^{3} கு^{3}ரும் க^{3}ணபதிம் ஸ்கந்த^{3}மாதி^{3}த்யமம்பி^{3}காம் |
து^{3}ர்கா^{3}ம் ஸரஸ்வதீம் லக்ஷ்மீம் ஸர்வகார்யார்த^{2}ஸித்^{3}த^{4}யே ||

ஸமஸ்த தேவதாஸ்வரூபியான குருநாதரையும், கணங்களின் பதியான விநாயகரையும், முருகப் பெருமானையும், ஆதித்யனான ஸூர்யதேவரையும் அம்பிகையையும், துர்காதேவியையும், ஸரஸ்வதீ தேவியையும், லக்ஷ்மீ தேவியையும் ஸர்வ கார்யங்களும் நன்றாக நடக்க (ஸித்திக்க) வேண்டி வந்தனம் செய்கின்றேன்.

(ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய காயத்ரீ மந்த்ரம்)

ஓம் மஹாஸேநாய வித்^{3}மஹே
ஷடா^{3}நநாய தீ^{4}மஹி |
தந்ந: ஸ்கந்த:^{3} ப்ரசோத^{3}யோத் |

தேவர்களின் மஹாஸேனைக்கு (பெரும்படைக்கு) அதிபதியாகவும், அந்த மஹாஸேனையின் வடிவாகவும் இருப்பவராய், முருகக்கடவுளை தியானிப்போம், ஆறு திருமுகங்கள் கொண்டவராய் அவரை ஆழ்ந்து சிந்திப்போம், அந்த கந்தக் கடவுள் எனது அறிவினை அறத்தின் வழியில் தூண்டி நடத்துவாராக.

நகாராதி^{3}நாமாநி 50

'ந' என்னும் எழுத்தில் தொடங்கும் நாமங்கள் 50

ஓம் நம் ஸௌம் ஈம் நம் ளம் ஸ்ரீம் ஶரவணப^{4}வ ஹம்
ஸத்^{3}யோஜாத ஹ்ராம் ஹ்ரு'த^{3}ய – ப்^{3}ரஹ்ம –
ஸ்ரு'ஷ்டிகாரண – ஸுப்^{3}ரஹ்மண்ய

ஓம் நம் ஸௌம் ஈம் நம் ளம் ஸ்ரீம் ஆகிய பீஜங்களின் ஸ்வரூபமாகவும், **ஶர**வணபவனாகவும், ஹம் பீஜ வடிவினராகவும், ந என்னும் எழுத்தின் வடிவமாகவும், ஸத்யோஜாத **ஶி**வமாகவும், ஹ்ராம் எனும் பீஜமந்த்ர ஸ்வரூபியாயும், ஹ்ருதயத்தின் வடிவமாகவும், ப்ரஹ்ம தேவரின் வடிவமாகவும், படைப்பிற்கு காரணமாகவும் இருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி

ஶிவ–நாதா^{2}ய நம: |

ஶிவபெருமானின் நாதராயிருப்பவருக்கு (சுவாமி மலையில் சுவாமிநாத சுவாமியாய் / தந்தைக்கே பாடம் சொன்ன தலைவனாய் இருப்பவருக்கு) நமஸ்காரம்.

நிர்லேபாய நம: |

எதிலும் ஒட்டாமல் இருப்பவருக்கு நமஸ்காரம்

நிர்மமாய நம: |

மமதை (எனது / என்னுடையது என்னும் எண்ணம்) இல்லாதவர்க்கு நமஸ்காரம்

நிஷ்கலாய நம: |

கூறுபடாமல் (பிரிவுபடாமல்) முழுமையாக இருப்பவருக்கு நமஸ்காரம்

நிர்மோஹாய நம: | 5

மோஹம் (பொய்யை உண்மையாக நினைத்தல் / மயக்கம்) அற்றவருக்கு நமஸ்காரம்

நிர்மலாய நம: |

அப்பழுக்கற்றவருக்கு நமஸ்காரம்

நிர்விகாராய நம: |

மாற்றங்கள் இல்லாதவருக்கு நமஸ்காரம்

நிராபா[4]ஸாய நம: |

மாயத் தோற்றங்களுக்கு அப்பாற்பட்டவராக இருப்பவருக்கு நமஸ்காரம்

நிர்விகல்பாய நம: |

எண்ணஓட்டங்கள் அற்றவருக்கு நமஸ்காரம்

நித்யத்ரு'ப்தாய நம: | 10

எப்போதும் திருப்தியோடு நிறைவுற்று இருப்பவருக்கு நமஸ்காரம்

நிவ்ரு'த்தகாய நம: |

பிறப்பிறப்புக்குக் காரணமான லோகாயத ஆசைகள் இல்லாதவருக்கு நமஸ்காரம்

நிருபத்^{3}ரவாய நம: |

எந்த துன்பங்களும் ஆபத்துக்களும் இல்லாதவருக்கு நமஸ்காரம்

நிதீ^{4}ஶாய நம: |

பத்^{3}மம், மஹாபத்^{3}மம், **ஶ**ங்க^{2}ம், மகரம், கச்ச^{2}பம், முகுந்த^{3}ம், நந்த^{3}ம், நீலம், க^{2}ர்வம் ஆகிய நவ (ஒன்பது) நிதிகளுக்கும் தலைவராக இருப்பவருக்கு நமஸ்காரம்.

நிர்மமப்ரியாய நம: |

எனது என்னும் மமகார எண்ணம் இல்லாதவர்களை விரும்புபவருக்கு நமஸ்காரம்

நித்யயோகி^{3}நே நம: | 15

என்றென்றும் யோகியாய் (பரமாத்மதத்வ ஸ்வரூபியாய் அதனுடன் இணைந்து) இருப்பவருக்கு நமஸ்காரம்

நித்யஶுத்^{3}தா^{4}ய நம: |

எப்போதும் புனிதமாகவும் தூய்மையாகவும் இருப்பவருக்கு நமஸ்காரம்

நிதீ^{4}நாம்பதயே நம: |

ஒன்பது நிதிகளுக்கும் தலைவராய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

நித்யநியமாய நம: |

என்றென்றும் நியமங்களாய் விளங்கும் ஸநாதனமான தர்மஸ்வரூபியாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

நிஷ்காரணாய நம: |

தனக்கு காரணம் ஒன்றும் இல்லாதவருக்கு நமஸ்காரம்

நிஸ்ஸங்கா^{3}ய நம: | 20

எதனோடும் பற்றுதல் இல்லாதவருக்கு நமஸ்காரம்

நிதி[4]ப்ரியாய நம: |

நிதிகளிடம் ப்ரியமாக இருப்பவருக்கு நமஸ்காரம்

நித்யப்[4]ரு'தே நம: |

எப்போதும் அனைத்தையும் தாங்குபவருக்கு நமஸ்காரம்

நித்யவஸ்துநே நம: |

என்றும் நிலையாய் இருக்கும் பரம்பொருளுக்கு நமஸ்காரம்

நித்யாநந்த[3]கு[3]ரவே நம: |

எப்போதும் ஆனந்த வடிவாய் இருக்கும் குருநாதனுக்கு நமஸ்காரம்

நித்யகல்யாணாய நம: | 25 |

எப்போதும் மங்கள வடிவினனாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

நிதா[4]த்ரே நம: |

வேண்டுபவருக்கு வேண்டியதைத் தருபவரும், தரக்கூடாததை தராமலிருப்பவருக்கும் நமஸ்காரம். / அனைத்தையும் படைத்து, காத்து, அழிப்பவருக்கு நமஸ்காரம்./ ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகியவரின் வடிவமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்.

நிராமயாய நம: |

எந்த ஒரு நோய்களுமற்றவருக்கு / எல்லா நோய் களையும் போக்குபவருக்கு நமஸ்காரம்

நித்யயோகி[3]ஸாக்ஷிப்ரியவாதா[3]ய நம: |

எப்போதும் யோகிகளுக்கு ஸாக்ஷியாக இருப்பவருக்கும் பெரும் யோகத்தில் ஈடுபட்டிருக்கும் மஹாயோகிகளுக்கு ப்ரியமாக பேசுபவருக்கும் நமஸ்காரம். (முருகப்பெருமான் யோகிகளின் யோக ஸாதனைகளை ஸாக்ஷி பூதராயிருந்து

கண்டு, யோகிகளுக்கு உபதேஶம் செய்வதை குறிக்கிறது இந்த திருநாமம்)

நாகே^{3}ந்த்^{3}ரஸேவிதாய நம: |

பாம்புகளின் அரசனான ஆதிசேஷனால் வணங்கப் படுபவருக்கு நமஸ்காரம்

நாரதோ^{3}பதே^{3}ஶகாய நம: | 30

தேவரிஷியான நாரதருக்கு உபதேசம் செய்தவருக்கு நமஸ்காரம்

நக்^{3}நரூபாய நம: |

திகம்பரவடிவினருக்கு நமஸ்காரம் (மறைப்புகள் ஏதும் அற்றவர் என்பது தத்துவம்)

நாநாபாபத்^{4}வம்ஸிநே நம: |

எல்லா பாபங்களையும் அழித்து ஒழிப்பவருக்கு நமஸ்காரம்

நாக^{3}பீட^{2}ஸ்தா^{2}ய நம: |

நாகபீடத்தில் நிற்பவருக்கு நமஸ்காரம்

நாதா^{3}ந்தகு^{3}ரவே நம: |

நாதாந்தமாகிய பிரணவத்தின் குருநாதராய் இருப்பவருக்கு நமஸ்காரம்

நாக^{3}ஸுதகு^{3}ரவே நம: | 35

நாக மைந்தருக்கு குருவாயிருப்பவருக்கு நமஸ்காரம் (நாகம் என்பது நமது உடலில் உள்ள குண்டலினியைக் குறிக்கும். அதனைத் தூண்டுவிக்கிறார் கந்தகுருநாதர்)

நாத^{3}ஸாக்ஷிணே நம: |

ஒலிகள் அனைத்திற்கும் சாட்சியாக விளங்குபவருக்கு நமஸ்காரம்

நாக^{3}பாஶஹராய நம: |

நாக பாசத்தை அகற்றுபவருக்கு நமஸ்காரம்

நாகா^{3}ஸ்த்ரத^{4}ராய நம: |

நாகாஸ்திரத்தை ஏந்தியவருக்கு நமஸ்காரம்

நடநப்ரியாய நம: |

நடனத்தில் ஆசை மிக்கவருக்கு நமஸ்காரம்

நந்தி^{3}த்^{4}வஜிநே நம: | 40

நந்திக் கொடியை உடைய சிவபெருமானின் வடிவமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

நவரத்நபாது^{3}காபாதா^{3}ப்^{3}ஜாய நம: |

வைரம், முத்து, பவளம், கோமேதகம், மாணிக்கம், மரகதம், பத்மராகம், நீலம், வைடூரியம் ஆகிய ஒன்பது ரத்தினங்கள் பதித்த பாதுகையை அணிந்த பாதத் தாமரை உடையவருக்கு நமஸ்காரம்

நடேஶ ப்ரியாய நம: |

நடனமாடும் ஈசரான நடராஜருக்கு மிகவும் பிரியமான வருக்கு நமஸ்காரம்

நவவைடூ^{3}ர்யஹாரகேயூரகுண்ட^{3}லாய நம: |

புதுமையான வைடூரியத்தால் செய்யப்பட்ட ஹாரம், தோள்வளைகள், குண்டலங்கள் ஆகியவற்றை அணிந்த வருக்கு நமஸ்காரம்.

நிமிஷாத்மநே நம: |

நொடி / காலத்தின்(விஷ்ணுவின்) வடிவமாய் இருப்ப வருக்கு நமஸ்காரம்

நித்யபு^{3}த்^{3}தா^{4}ய நம: | 45

எப்போதும் அறிவின் விழிப்பு நிலையில் இருப்பவருக்கு நமஸ்காரம்

நமஸ்காரப்ரியாய நம: |

நமஸ்காரங்களை விரும்புபவருக்கு நமஸ்காரம்

நாத^{3}பி^{3}ந்து^{3}கலாமூர்தயே நம: |

நாத-பிந்து-கலை வடிவினருக்கு நமஸ்காரம். (லிங்கம், பீடம் (சிவ சக்தி) ஆகிய தத்துவங்களுக்கு மூலப்பொருள் என்பது கருத்து)

நித்யகௌமாரவீரபா^{3}ஹவே நம: |

எப்போதும் இளமையும், வீரமும் மிக்க திண்தோள் களையுடையவருக்கு நமஸ்காரம்

நித்யாநந்த^{3}தே^{3}ஶிகாய நம: |

என்றும் ஆனந்த மயமாய் விளங்கும் குருநாதனுக்கு நமஸ்காரம்

நகாராத்^{3}யந்த ஸம்பூர்ணாய நம: | 50

ந என்னும் எழுத்தாகவும், முதல், இடை, கடை என முழுமையாய் விளங்கி அனைத்துமாய் நிற்கும் முருகப் பெருமானுக்கு நமஸ்காரம்

மகாராதி^{3}நாமாநி 50

'ம' என்னும் எழுத்தில் தொடங்கும் நாமங்கள் 50

ஓம் மம் ஸௌம் ஈம் நம் ளம் ஹ்ரீம் ரவணப^{4}வஶ ஹிம் வாமதே^{3}வ ஹ்ரீம் ஶிரோ– விஷ்ணு– ஸ்தி^{2}திகாரண – ஸுப்^{3}ரஹ்மண்ய

ஓம் மம் ஸௌம் ஈம் நம் ளம் ஹ்ரீம் ரவணப^{4}வ**ஶ** ஹிம் ஆகிய பீஜ மந்த்ரங்களின் ஸ்வரூபமாகவும், ம என்னும் எழுத்தின் வடிவமாகவும், வாமதேவ**ஶி**வமாகவும், ஹ்ரீம் எனும் மந்த்ர வடிவமாகவும், **ஶி**ரத்தின் வடிவாகவும், மஹாவிஷ்ணு பகவானின் வடிவமாகவும், காத்தலுக்குக் காரணமாகவும் இருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி

மஹாப^{3}லாய நம: |

பெரும் ஆற்றல் (பலம்) உடையவருக்கு நமஸ்காரம்

மஹோத்ஸாஹாய நம: |

பெரும் உற்சாகம் உடையவருக்கு நமஸ்காரம்

மஹாபு^{3}த்^{3}த^{4}யே நம: |

பேரறிவு படைத்தவருக்கு நமஸ்காரம்

மஹாபா^{3}ஹவே நம: |

பெருந்தோள்களை உடையவருக்கு நமஸ்காரம்

மஹாமாயாய நம: | 5

பெரும் மாயையின் வடிவமாக இருப்பவருக்கு நமஸ்காரம்

மஹாத்^{3}யுதயே நம: |

பேரொளி பொருந்தியவருக்கு நமஸ்காரம்

மஹாத^{4}நுஷே நம: |

பெரும் வில்லினை ஏந்தியவருக்கு நமஸ்காரம்

மஹாபா^{3}ணாய நம: |

பெரும் அம்பை உடையவருக்கு நமஸ்காரம்

மஹாகே^{2}டாய நம: |

பெரும் கேடயத்தைப்பிடித்திருப்பவருக்கு நமஸ்காரம்

மஹாசூலாய நம: | 10

பெரும் சூலத்தை ஏந்தியவருக்கு நமஸ்காரம்

மஹாத^{4}நுர்த^{4}ராய நம: |

பெரும் வில்லை தனது திருக்கரத்தில் ஏந்தியிருப்ப வருக்கு நமஸ்காரம்

மஹாமயூராரூடா[4]ய நம: |

பெரும் மயில் மேல் ஏறி அமர்ந்திருப்பவருக்கு நமஸ்காரம்

மஹாதே[3]வப்ரியாத்மஜாய நம: |

மஹாதேவரான சிவபெருமானின் பிரியமிக்க மகனுக்கு நமஸ்காரம்

மஹாஸத்த்வாய நம: |

பெரும் ஸத்வகுணம் உடையவருக்கு நமஸ்காரம்

மஹாஸௌம்யாய நம: | **15**

பேரழகு படைத்தவருக்கு நமஸ்காரம்

மஹாஶக்தயே நம: |

பெரும் சக்தி படைத்தவருக்கு நமஸ்காரம் / பெருவேலை ஏந்திய முருகனுக்கு நமஸ்காரம்

மஹாமாயாஸ்வரூபாய நம: |

உலகமனைத்தையும் மயக்கும் பெரும் மாயையின் வடிவினருக்கு நமஸ்காரம்

மஹாநுபா[4]வாய நம: |

மிகமிகச் சிறந்தவருக்கு நமஸ்காரம்

மஹாப்ரப[4]வே நம: |

பெரும் தலைவருக்கு நமஸ்காரம்

மஹாகு[3]ரவே நம: | **20**

பெரும் குருநாதருக்கு நமஸ்காரம்

மஹாரஸாய நம: |

பெரும் சுவையாக இருப்பவருக்கு நமஸ்காரம்

மஹாரதா[2]ரூடா[4]ய நம: |

பெரும் தேரில் ஏறி இருப்பவருக்கு நமஸ்காரம்

மஹாபா^{4}கா^{3}ய நம: |

பெரும் பாக்கியம் உடையவருக்கு நமஸ்காரம்

மஹாமகுடாய நம: |

பெரிய கிரீடத்தை அணிந்திருப்பவருக்கு நமஸ்காரம்

மஹாகு^{3}ணாய நம: | 75 |

பெரும் நற்குணங்கள் உடையவருக்கு நமஸ்காரம்

மந்தா^{3}ரஸேக^{2}ராய நம: |

மந்தார மலர்களையும் மாலையையும் சிரத்தில் அணிந்தவருக்கு நமஸ்காரம்

மஹாஹாராய நம: |

பெரிய ஹாரத்தை அணிந்தவருக்கு நமஸ்காரம்

மஹாமாதங்க^{3} க^{3}மநாய நம: |

பெரும் யானை மீது ஏறிச் செல்லும் கஜவாஹன மூர்த்தியான முருகருக்கு நமஸ்காரம்

மஹாஸங்கீ^{3}த–ரஸிகாய நம: |

சங்கீதத்தை மிகவும் விரும்பி ரசிப்பவருக்கு நமஸ்காரம்

மது^{4}பாநப்ரியாய நம: | 30

இனிய தேனை அருந்துவதில் விருப்பமுடையவருக்கு நமஸ்காரம்

மது^{4}ஸூத^{3}நப்ரியாய நம: |

மது என்னும் அரக்கனை அழித்த நாராயணனிடம் மிகவும் விருப்பமுள்ளவருக்கு நமஸ்காரம்

மஹாப்ரஸஸ்தாய நம: |

பெரும் புகழ் கொண்டவருக்கு நமஸ்காரம்

மஹாவ்யக்தயே நம: |

பெரியவருக்கு (பெருமாளுக்கு) நமஸ்காரம்

மஹாவக்த்ராய நம: |

பெரும் திருமுகம் கொண்டவருக்கு நமஸ்காரம்

மஹாயஶஸே நம: | 35

பெரும் புகழை (திருப்புகழை) உடையவருக்கு நமஸ்காரம்

மஹாமாத்ரே நம: |

பெரும் தாயின் வடிவினருக்கு நமஸ்காரம்

மஹாமணிக[3]ஜாரூடா[4]ய நம: |

பெரும் ரத்தினங்களால் ஆன யானை மீது வீற்றிருப்ப வருக்கு நமஸ்காரம்

மஹாத்மநே நம: |

பெருமைமிக்கவருக்கு (மஹாத்மாவிற்கு) நமஸ்காரம்

மஹாஹவிஷே நம: |

யஜ்ஞத்தில் ஸமர்ப்பிக்கப்படும் மஹா ஹவிஸ்ஸாக (சிறந்த அவியுணவாக) விளங்குபவருக்கு நமஸ்காரம்

மஹிமாகாராய நம: | 40

மகிமைகள் பல கொண்டவருக்கு நமஸ்காரம்

மஹாமார்கா[3]ய நம: |

பெரும் வழியாக விளங்குபவருக்கு நமஸ்காரம்

மதோ[3]ந்மத்த பை[4]ரவ பூஜிதாய நம: |

பெருமை (மதம்) மிகுந்த (சிவானந்தத்தால் தன்னை மறந்த நிலையில்) உன்மத்த வடிவில் இருக்கும் பைரவரால் பூஜிக்கப்படுபவருக்கு நமஸ்காரம். (அஷ்ட பைரவர்களில் ஒருவர் உன்மத்த பைரவர். அவரது **ஶ**க்தி வாராஹி. உன்மத்த நிலை என்பது தன்னை மறந்து பித்தேறிய நிலையைக் குறிக்கும்; **ஶி**வானந்த தாண்டவம் செய்யும் உன்மத்த பைரவர், பக்தர்களின் பக்தியிலும் ஆனந்த தாண்டவத்திலும் மெய் மறந்து பித்தேறிய நிலையிலே விளங்குகிறார். அவர்

சிவபிரானது அம்ஸாவதாரமாக இருந்தாலும் முருகப் பெருமானை பூஜிக்கிறார் என்று இந்த நாமம் தெரிவிக்கிறது. ஒப்புநோக்குக:

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ..... எனவோத

[திருப்புகழ்]

முருகப்பெருமான் போர்க்கடவுளாக விளங்குவதால் அந்தப் போரில் மகிழ்ந்த உன்மத்த பைரவர் அப்போரின் தலைவனான முருகப்பெருமானை வணங்குகிறார் என்பது கருத்து.)

மஹா வல்லீ ப்ரியாய நம: |

பெருமை மிகுந்த வள்ளி தேவிக்கு பிரியமானவருக்கு நமஸ்காரம்

மத[3]நாகார வல்லபா[4]ய நம: |

மன்மதனைப் போன்ற அழகிய திருமேனியை உடையவருக்கு நமஸ்காரம்

மந்தா[3]ரகுஸுமப்ரியாய நம: | 45

மந்தார மலரை விரும்புபவருக்கு நமஸ்காரம்

மாம்ஸாகர்ஷணாய நம: |

மாம்ஸம் (கொழுப்பு) என்னும் தாதுவை ஆகர்ஷிப்ப வருக்கு நமஸ்காரம்

மண்ட[3]ல த்ரய வாஸினே நம: |

மூன்று மண்டலங்களில் வசிப்பவருக்கு நமஸ்காரம் (பிரம்மா, விஷ்ணு, சிவ மண்டலங்களில் என்றோ தேவ, மனித, பாதாள உலகங்களில் வசிப்பவர் என்றோ பொருள் கொள்ளலாம்)

மஹா போ^{4}கா^{3}ய நம: |

பெரும் போகத்தின் வடிவமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

மஹா ஸேநாந்யே நம: |

தேவர்களின் பெரும்படைக்கு தலைவராய் விளங்கு பவருக்கு நமஸ்காரம்

மகாராத்^{3}யந்த ஸம்பூர்ணாய நம: | 50/100 |

ம என்னும் எழுத்தாகவும், முதல், இடை, கடை என முழுமையாய் விளங்கி அனைத்துமாய் நிற்கும் முருகப் பெருமானுக்கு நமஸ்காரம்

ஶிகாராதி^{3}நாமாநி 50

'**ஶ**' என்னும் எழுத்தில் தொடங்கும் நாமங்கள் 50

ஓம் ஶிம் ஸௌம் ஈம் நம் ளம் க்லீம் வணப^{4}வஶர ஹூம் அகோ^{4}ர ஹூம் ஶிகா^{2}–ருத்^{3}ர–ஸம்ஹாரகாரண–ஸுப்^{3}ரஹ்மண்ய

ஓம் **ஶி**ம் ஸௌம் ஈம் நம் ளம் க்லீம் வணப^{4}வ**ஶ**ர ஹூம் எனும் பீஜ மந்த்ரங்களின் ஸ்வரூபமாகவும், **ஶி** என்னும் எழுத்தின் வடிவமாகவும், அகோர**ஶி**வமாகவும், ஹூம் எனும் மந்த்ர வடிவமாகவும், **ஶி**கையின் வடிவாகவும், ருத்ரரின் வடிவமாகவும், அழித்தலுக்குக் காரணமாகவும் இருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி

ஶிவாநந்த ^{3}கு^{3}ரவே நம: |

சிவமாகிய ஆனந்தத்தை தரும் குருவிற்கு நமஸ்காரம்

ஶிவ ஸச்சிதா^{3}நந்த^{3}ஸ்வரூபாய நம: |

ஶிவம் (மங்களம்), ஸத் (தூய இருப்பு), சித் (தூய அறிவுணர்வு), ஆனந்தம் (தூய இன்பம்) என **ஶி**வ ஸச்சிதானந்த வடிவமாக இருப்பவருக்கு நமஸ்காரம்

ஶிக^{2}ண்டி ^{3}மண்ட^{3}லாவாஸாய நம: |

மயில் மண்டலத்தில் வசிப்பவருக்கு நமஸ்காரம்

ஶிவப்ரியாய நம: |

சிவபெருமானை மிகவும் விரும்புபவருக்கு நமஸ்காரம்

ஶரவணோத்^{3}பூ^{4}தாய நம: | 5

ஶரவணத்தில் (சரவணப் பொய்கையில்) தோன்றிய வருக்கு நமஸ்காரம்

ஶிவஶக்திவத^{3}நாய நம: |

சிவபெருமானையும் அன்னை சக்தியையும் தன் முகமாக கொண்டவருக்கு நமஸ்காரம்

ஶங்கரப்ரியஸுதாய நம: |

சிவபெருமானுக்கு மிகவும் விருப்பமான மைந்தனாய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

ஶுரபத்^{3}மாஸுர த்^{3}வேஷிணே நம: |

ஶுரபத்^{3}மாஸுரனிடம் கோபம் கொண்டவருக்கு நமஸ்காரம்

ஶுரபத்^{3}மாஸுர ஹந்த்ரே நம: |

ஶுரபத்^{3}மாஸுரனைக்கொன்றவருக்கு நமஸ்காரம்

ஶுராங்க^{3}த்^{4}வம்ஸினே நம: | 10

ஶுரனின் அங்கங்களை த்வம்சம் செய்தவருக்கு நமஸ்காரம்

ஶுக்லரூபாய நம: |

வெண்ணிறமுள்ள திருவுருவம் கொண்டவருக்கு நமஸ்காரம்

ஶுத்^{3}தா^{4}யுத^{4}த^{4}ராய நம: |

தூய்மையான ஆயுதங்களை ஏந்தியிருப்பவருக்கு நமஸ்காரம்

ஶுத்^{3}த^{4} வீரப்ரியாய நம: |

தூய வீரர்களை விரும்புபவருக்கு நமஸ்காரம்

ஶுத்^{3}த^{4}வீரயுத்^{3}த^{4}ப்ரியாய நம: |

தூய வீரர்கள் செய்யும் போரை விரும்புபவருக்கு நமஸ்காரம்

ஶுத்^{3}த^{4}மாநஸநிலயாய நம: | 15

தூய்மையான உள்ளங்களில் வசிப்பவருக்கு நமஸ்காரம்

ஶுஷ்ந்யஷட்கவர்ஜிதாய நம: |

ஆறு விதமான வெறுமைகள் அற்றவருக்கு நமஸ்காரம் (காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் ஆகிய துஷ்ட குணங்களைப் போக்குபவர்)

ஶுத்^{3}த^{4}தத்த்வஸம்பூர்ணாய நம: |

ஶுத்^{3}த^{4}தத்த்வத்தால் நிறைந்தவருக்கு (**ஶுத்**தமான ப்ரஹ்ம ஸ்வரூபிக்கு) நமஸ்காரம்

ஶங்க^{2}சக்ரகுலிஶத்^{4}வஜரேகா^{2}ங்க்^{4}ரிபங்கஜாய நம: |

சங்கு, சக்ரம், வஜ்ராயுதம், கொடி ஆகிய ரேகைகளை உடைய திருவடி தாமரைகளை உடையவருக்கு நமஸ்காரம்

ஶுத்^{3}த^{4}யோகி^{3}நீக^{3}ணதா^{3}த்ரே நம: |

தூய யோகினீ கணங்களுக்கு வேண்டியவற்றை அருள்பவருக்கு நமஸ்காரம்

ஶோகபர்வதத^{3}ம்ஷ்ட்ராய நம: | 20

சோகங்களாகிய மலையைத் தகர்த்தெறிபவருக்கு நமஸ்காரம்

ஶுத்^{3}த^{4}ரணப்ரியபண்டி^{3}தாய நம: |

தூய பெரும்போரினை விரும்பும் பண்டிதருக்கு நமஸ்காரம்

ஶரப^{4}வேகா^{3}யுத^{4}த^{4}ராய நம: |

ஶரபத்தைப் போன்ற வேகம் கொண்ட (**ஶர**பாஸ்த்ரம்) ஆயுதத்தை தரித்திருப்பவருக்கு நமஸ்காரம்

ஶரபதயே நம: |

அம்பிற்கு தலைவராய் இருப்பவருக்கு நமஸ்காரம்

ஶாகிநீ டா^{3}கிநீ ஸேவிதபாதா^{3}ப்^{3}ஜாய நம: |

ஶாகிநீ டா^{3}கிநீ ஆகிய தேவதைகளால் வணங்கப்பட்ட பாதத்தாமரைகளை உடையவருக்கு நமஸ்காரம்.

ஶங்க^{2}பத்^{3}ம நிதி^{4} ஸேவிதாய நம: | 125 |

ஶங்கநிதியாலும் பதுமநிதியாலும் ஸேவிக்கப்படுப வருக்கு நமஸ்காரம்

ஶதஸஹஸ்ராயுத^{4}த^{4}ரமூர்தயே நம: |

நூறு, ஆயிரம், பத்தாயிரம் எனப் பல எண்ணிலடங்காத வடிவங்கள் உடையவருக்கு நமஸ்காரம். பல ஆயுதங்களை ஏந்தியவருக்கு நமஸ்காரம்

ஶிவபூஜகமாநஸநிலயாய நம: |

ஶிவபெருமானை பூஜை செய்பவருடைய மனதில் வசிப்பவருக்கு நமஸ்காரம்

ஶிவதீ^{3}க்ஷாகு^{3}ரவே நம: |

ஶிவதீக்ஷை தந்திடும் குரு வடிவாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

ஶூரவாஹநாதி^{4}ரூடா^{4}ய நம: |

சூரபத்மனை மயில் ஆக்கி, அந்த மயில்மீது ஏறி அமர்ந்திருப்பவருக்கு நமஸ்காரம்

ஶோகரோக^{3}நிவாரணாய நம: | 30

சோகத்தையும், வியாதிகளையும் போக்குபவருக்கு நமஸ்காரம்

ॐசயே நம: |

தூயவருக்கு (என்றும் புதுமையான புறவழகும், வடிவழகும் பொருந்தியவர்) நமஸ்காரம்

ॐத்[3]தா[4]ய நம: |

ॐத்தமானவருக்கு (தூய்மையான அகவழகு மிக்கவர்) நமஸ்காரம்

ॐத்[3]த[4]கீர்தயே நம: |

தூய புகழை உடையவருக்கு நமஸ்காரம்

ॐசிஶ்ரவஸே நம: |

அழகிய, தூய திருநாமங்களை உடையவருக்கு நமஸ்காரம்

ॐக்தயே நம: | 35

சக்தி வடிவானவருக்கு நமஸ்காரம் / வேலுக்கு நமஸ்காரம்

ॐத்ருக்ரோத[4]விமர்த[3]நாய நம: |

எதிரியின் கோபத்தை அழிப்பவருக்கு நமஸ்காரம்

ஶ்வேதப்ரபா[4]ய நம: |

வெண்ணிறமாய் ஒளிரும் ஒளிப்பிரபை உடையவருக்கு நமஸ்காரம்

ஶ்வேதமூர்தயே நம: |

வெந்நிறத் திருமேனி கொண்டவருக்கு நமஸ்காரம்

ஶ்வேதாத்மகாய நம: |

தூய வெள்ளை உள்ளம் படைத்தவருக்கு நமஸ்காரம்

ஶாரணகுலாந்தகாய நம: | 40

அரக்கர் குலத்திற்கு யமனானவருக்கு நமஸ்காரம்

ஶதமூர்தயே நம: |

நூற்றுக்கணக்கான வடிவங்களை ஏற்பவருக்கு நமஸ்காரம்

ஶதாயுதா[4]ய நம: |

நூற்றுக்கணக்கான ஆயுதங்களைக் கொண்டவருக்கு நமஸ்காரம்

ஶரீரத்ரயநாயகாய நம: |

ஸ்தூல**ஶ**ரீரம், ஸூக்ஷ்ம**ஶ**ரீரம், காரண**ஶ**ரீரம் ஆகிய மூன்று **ஶ**ரீரங்களுக்கும் நாயகனாய் விளங்கும் ஆத்ம ஸ்வரூபியானவருக்கு நமஸ்காரம்

ஶுப[4]லக்ஷணாய நம: |

மங்களகரமான (சுபமான) லக்ஷணங்களை உடைய வருக்கு நமஸ்காரம்

ஶுபா[4]ஶுப[4]வீக்ஷணாய நம: | 45

நன்மை தீமைகளை இரு கண்களாய் உடையவருக்கு நமஸ்காரம் (முருகப்பெருமானின் இரண்டு கண்களில் சூரியனும், சந்திரனும் உள்ளார்கள். நன்மை செய்வோருக்கு குளிர்ந்த நிலவெனக் குளிர்ச்சியையும், தீமை செய்பவருக்கு சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பத்தையும், தனது திருக் கண்ணின் பார்வை மூலமாகவே தருகின்றான் முருகப் பெருமான்)

ஶுக்ரஶோணிதமத்[4]யஸ்தா[2]ய நம: |

உயிர்களின் தோற்றத்திற்குக் காரணமான **ஶு**க்ரம் (புருஷ**ஶ**க்தி - **ஶி**வன்) - **ஶோ**ணிதம் (ஸ்த்ரீ**ஶ**க்தி - அம்பிகை) ஆகிய **ஶ**க்திகளின் நடுவில் ஸோமாஸ்கந்த மூர்த்தியாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

ஶுண்டா^{3}த^{3}ண்ட^{3}பூ^{2}த்காரஸோத^{3}ராய நம: |

நீண்ட தண்டம் போன்ற தும்பிக்கையை கொண்டு ஊதி விளையாடும் விநாயகப் பெருமானின் சகோதரருக்கு நமஸ்காரம்

ஶுத்3ந்யமார்க^{3}தத்பரஸேவிதாய நம: |

அத்வைதமார்க்கத்தை லக்ஷ்யமாக உடையவர்களால் ஸேவிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

ஶாஶ்வதாய நம: |

எப்போதும் நிலையாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

ஶிகாராத்^{3}யந்த ஸம்பூர்ணாய நம: | 50/150 |

ஶி என்னும் எழுத்தாகவும், முதல், இடை, கடை என முழுமையாய் விளங்கி அனைத்துமாய் நிற்கும் முருகப் பெருமானுக்கு நமஸ்காரம்

வகாராதி^{3}நாமாநி 50

'வ' என்னும் எழுத்தில் தொடங்கும் நாமங்கள் 50

ஓம் வம் ஸௌம் ஈம் நம் ளம் ஐம் ணப^{4}வஶரவ ஹ்ரீம் தத்புருஷ ஹ்ரைம் மஹேஶ்வர– திரோபா^{4}வகாரண– ஸுப்^{3}ரஹ்மண்ய

ஓம் வம் ஸௌம் ஈம் நம் ளம் ஐம் ணப^{4}வ**ஶ**ரவ ஹ்ரீம் எனும் பீஜ மந்த்ரங்களின் ஸ்வரூபமாகவும், வ என்னும் எழுத்தின் வடிவமாகவும், தத்புருஷ**ஶி**வமாகவும், ஹ்ரைம் எனும் மந்த்ர வடிவமாகவும், மஹே**ஶ்**வரரின் வடிவமாகவும், மறைத்தலுக்குக் காரணமாகவும் இருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி

வல்லீமாநஸஹ்ரம்ஸிகாய நம: |

வள்ளிதேவியின் மனதில் அன்னப்பறவை போல இருப்பவருக்கு நமஸ்காரம்

விஷ்ணவே நம: |

எங்கும் நிறைந்திருக்கும் விஷ்ணுவின் வடிவானவருக்கு நமஸ்காரம்

விது^{3}ஷே நம: |

அறிவும் கவனமும் மிக்கவருக்கு நமஸ்காரம்

வித்^{3}வஜ்ஜநப்ரியாய நம: |

அறிவிற்சிறந்த மக்களை விரும்புபவருக்கு நமஸ்காரம்

வேலாயுத^{4}த^{4}ராய நம: | 5

வேலாயுதத்தைக் கையில் தரித்திருப்பவருக்கு நமஸ்காரம்

வேக^{3}வாஹநாய நம: |

வேகமாக செல்லும் வாகனம் உடையவருக்கு நமஸ்காரம் (மிகுந்த வேகம் கொண்ட மயிலை வாகனமாக உடையவர் என்பது கருத்து)

வாமதே^{3}வமுகோ^{2}த்பந்நாய நம: |

வாமதேவரான சிவபெருமானின் திருமுகத்திலிருந்து தோன்றியவருக்கு நமஸ்காரம்

விஜயகர்த்ரே நம: |

வெற்றியைத் தருபவருக்கு நமஸ்காரம்

விஶ்வரூபாய நம: |

உலக வடிவினருக்கு நமஸ்காரம்

(உலகம் அனைத்தையும் தன்னகத்தே காட்டும் வடிவம் விஶ்வரூபம் ஆகும்)

விந்த்^{4}யஸ்கந்தா^{3}த்^{3}ரி நடநப்ரியாய நம: | 10

விந்த்யமலையின் சிகரங்களில் நடனம் செய்வதில் விருப்பம் உடையவருக்கு நமஸ்காரம்

விர்வபே[4]ஷஜாய நம: |

உலகனைத்திற்கும் பெருமருந்தாய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

வீரஶக்திமாநஸநிலயாய நம: |

வீரமும் சக்தியும் மிகுந்த மனதில் வசிப்பவருக்கு நமஸ்காரம்

விமலாஸநோத்க்ரு'ஷ்டாய நம: |

தூய்மையான இருக்கையில் மகிமை மிகக் கொண்டு, அமர்ந்திருப்பவருக்கு நமஸ்காரம்

விலாஸநோத்க்ரு'ஷ்டதே[3]ஹாய நம: |

மிக அழகியதும், இணையற்றதும், பெருமதிப்புமிக்க ஆபரணங்களை அணிந்ததுமான திருமேனியை உடைய வருக்கு நமஸ்காரம்

வாக்[3]தே[3]வீநாயகாய நம: | 15

ப்ரஹ்மதேவரின் வடிவத்தில் வாக்தேவியாம் ஸரஸ்வதியின் நாதராய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

வெளஷட[3]ந்தஸம்பூர்ணாய நம: |

வெளஷட் என்று முடிவில் சொல்லி தேவதைகளுக்கு ஆஹுதியாக கொடுக்கச் சொல்லப்படும் மந்த்ரங்களுடைய வும், அந்த யாகத்துடையவும்,அதை கொண்டு செல்லும் அக்னி தேவனுடையவும், அந்த உத்தே**ஶ்ய**க்கப்பட்ட தேவதை யுடையவும் ஸம்பூர்ண ஸ்வரூபமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்.

வாசாமகோ[3]சராய நம: |

வாக்கினால் வர்ணிக்க முடியாத மஹிமையை உடைய வருக்கு நமஸ்காரம் (வாக்கிற்கு அப்பாற்பட்டவருக்கு நமஸ்காரம்)

வாஸநாக^{3}ந்த^{4}த்^{3}ரவ்யப்ரியாய நம: |

வாஸனைப் பொருட்கள், கந்தங்கள் (சந்தனம், ஜவ்வாது, புனுகு) முதலிய திரவியங்களில் மிகவும் விருப்பம் உடைய வருக்கு நமஸ்காரம்

வாத^{3}போ^{3}த^{4}காய நம: |

வாதத்தை போதிப்பவருக்கு நமஸ்காரம். (வாக்கினால் வாதம் செய்து எதிரிகளைத் தோற்கடிக்கும் வாதக்கலையை போதிப்பவர் என்பது கருத்து.)

வாத^{3}வித்^{3}யாகு^{3}ரவே நம: | 20

வாதம் செய்யும் கல்விக்கு (வித்யைக்கு) குருவாய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

வாயுஸாரத்^{2}யமஹாரதா^{2}ரூடா^{4}ய நம: |

வாயு தேவனால் ஓட்டப்படும் (காற்றைப் போல் மிக வேகமாக செல்லும்) பெருந்தேரில் ஏறியருள்பவருக்கு நமஸ்காரம்.

வாஸுகிஸேவிதாய நம: |

வாஸுகி என்ற நாகராஜாவால் சேவிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

வாதுலாக^{3}மபூஜிதாய நம: |

வாதுலம் என்ற ஆகமத்தால் பூஜிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

விதி^{4}ப^{3}ந்த^{4}நாய நம: |

ப்ரஹ்மதேவரைக் கட்டிச் சிறையில் போட்டவருக்கு நமஸ்காரம். (ப்ரணவப் பொருள் மறந்த ப்ரஹ்மதேவனைச் சங்கிலியால் கட்டி, சிறையில் அடைத்து முருகப்பெருமான் தண்டித்ததை நினைவு கூறுகிறது இந்த நாமம்)

விஶ்வாமித்ரமக^{2}ரக்ஷிதாய நம: | 25

விஶ்வாமித்ரரின் யாகத்தை காத்தவருக்கு நமஸ்காரம்

வேதா^{3}ந்தவேத்^{3}யாய நம: |

வேதாந்தத்தால் அறியப்படுபவருக்கு நமஸ்காரம்

வீதராக^{3}ஸேவிதாய நம: |

விருப்புகளற்ற முனிவர்களால் வழிபடப்படுபவருக்கு நமஸ்காரம்

வேத^{3}சதுஷ்டயஸ்துத்யாய (ஸ்துதாய) நம: |

ரிக், யஜுர், ஸாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களால் போற்றப்படுபவருக்கு நமஸ்காரம்

வீரப்ரமுக^{2}ஸேவிதாய நம: |

வீரர்களில் சிறந்தவர்களாலும், முக்கியமானவர்களாலும் போற்றப்படுபவருக்கு நமஸ்காரம்

விஶ்வபோ^{4}க்த்ரே நம: | 30

உலகங்கள் அனைத்தையும் அனுபவிப்பவருக்கு நமஸ்காரம்

விஶாம் பதயே நம: |

மனிதர்கள் அனைவருக்கும் தலைவராய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

விஶ்வயோநயே நம: |

உலகங்கள் அனைத்தையும் படைத்தவருக்கு நமஸ்காரம்

விஶாலாக்ஷாய நம: |

நீண்ட, அகன்ற, விசாலமான திருக்கண்களை உடையவருக்கு நமஸ்காரம்

வீரஸேவிதாய நம: |

வீரர்களால் சேவிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

விக்ரமோபரிவேஷாய நம: | 35

செயற்கரிய செய்யும் தன்மை உடையவராய், செயற்கரிய செயல்களைச் செய்வோரால் சூழப்பட்டவருக்கு நமஸ்காரம்

வரதா^{3}ய நம: |

வரங்களை தருபவருக்கு நமஸ்காரம்

வரப்ரதா^{3}நாம் ஶ்ரேஷ்டா^{2}ய நம: |

வரங்களைத் தருபவர்களுக்குள் மிகச்சிறந்தவருக்கு நமஸ்காரம்

வர்த^{4}மானாய நம: |

வளர்ந்து நின்ற விஶ்வரூப வடிவில் விளங்குபவருக்கு நமஸ்காரம். (முருகப்பெருமானின் விஶ்வரூபம் ஸ்கந்த புராணத்தில் மிகச் சிறப்பாக போற்றப்படுகிறது. வளர் எழில் உடைய கந்தனுக்கு நமஸ்காரம்)

வாரிஸ்ரோதாய நம: |

கங்கை (நீரில் தோன்றிய) நதியின் மைந்தருக்கு நமஸ்காரம்

வானப்ரஸ்தா^{2}ய நம: | 40

வனத்திற்கு சென்றவருக்கு நமஸ்காரம். (வானப்ரஸ்த ஆஶ்ரமத்தில் விளங்குபவருக்கு நமஸ்காரம். வள்ளியை திருக்கல்யாணம் செய்து கொள்வதற்காக வனமுறை வேடனாகி நின்ற முருகருக்கு நமஸ்காரம். வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ் கதிர்காமம் உடையோனே)

வீரபா^{3}ஹ்வாதி^{3}ஸேவிதாய நம: |

வீரபாஹு முதலிய 9 வீரர்களால் ஸேவிக்கப்படுப வருக்கு நமஸ்காரம்

(1.வீரபாஹு, 2.வீரகேஸரி, 3.வீரமஹேந்த்ரர், 4.வீரமஹேஶ்வரர், 5.வீரபுரந்தரர், 6.வீரராக்கதர்,

7.வீரமார்த்தாண்டர், 8.வீராந்தகர், 9.வீரதீரர் ஆகியோர் நவீரர்களாம்)

விஷ்ணுப்[3]ரஹ்மாதி[3]பூஜிதாய நம: |

மஹாவிஷ்ணு, ப்ரஹ்மதேவர் முதலான ஸகல தேவர் களாலும் பூஜிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

வீராயுத[4]ஸமாவ்ரு'தாய நம: |

வீரர்களின் ஆயுதங்களால் சூழப்பட்டவருக்கு நமஸ்காரம்

வீரஶூரமர்த[3]நாய நம: |

வீரராகிய சூரர்களைக் கொன்றவருக்கு நமஸ்காரம்

வ்யாஸாதி[3]முநிபூஜிதாய நம: | 45

வ்யாஸர் முதலிய முனிவர்களால் பூஜிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

வ்யாகரணாதி[3]ஶாஸ்த்ரநவோத்க்ரு'ஷ்டாய நம: |

இலக்கணம் (வ்யாகரணம்) முதலிய **ஶா**ஸ்த்ரங்களை புதுமையோடு மீண்டும் மேன்மை பெறச் செய்பவருக்கு நமஸ்காரம். (முருகப்பெருமான் சங்கத்தமிழ் வளர்த்ததையும் மனதில் கொள்ளலாம். வேதத்தின் ஆறு அங்கங்களாய் விளங்கும் **ஶி**க்ஷா, வ்யாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம், சந்தஸ், கல்பம் ஆகியவற்றை மேன்மை பெறச் செய்கிறார் என்பதையும் கொள்ளலாம்.)

விஶ்வதோமுகா[2]ய நம: |

உலகமெங்கும் நிறைந்திருக்கும் / அனைத்து திக்கு களையும் நோக்கும் பல முகங்களைக் கொண்டவருக்கு நமஸ்காரம்

வாஸவாதி[3]–பூஜிதபாதா[3]ப்[3]ஜாய நம: |

இந்திரன் முதலிய தேவர்களால் பூஜிக்கப்படும் பாதத்தாமரையை உடையவருக்கு நமஸ்காரம்

வஸிஷ்ட^{2}ஹ்ரு'த^{3}யாம்போ^{4}ஜநிலயாய நம: |

வஸிஷ்டமுனிவரின் இதயத் தாமரையில் குடியிருப்ப வருக்கு நமஸ்காரம்

வாஞ்சி^{2}தார்த^{2}ப்ரதா^{3}ய நம: |

விரும்பி கேட்கும் பொருட்கள் அனைத்தையும் தருபவருக்கு நமஸ்காரம்.

வகாராத்^{3}யந்தஸம்பூர்ணாய நம: | 200 |

வ என்னும் எழுத்தாகவும், முதல், இடை, கடை என முழுமையாய் விளங்கி அனைத்துமாய் நிற்கும் முருகப் பெருமானுக்கு நமஸ்காரம்

யகாராதி^{3}நாமாநி 50

'ய' என்னும் எழுத்தில் தொடங்கும் நாமங்கள் 50

ஓம் யம் ஸௌம் ஈம் நம் ளம் ஸௌ: ப^{4}வீ**ரவண ஹோம் ஈ**ீ**ந ஹ்ரௌம் நேத்ரத்ரய–**
ஸதா^{3}ஶிவாநுக்^{3}ரஹகாரண–ஸுப்^{3}ரஹ்மண்ய

ஓம் யம் ஸௌம் ஈம் நம் ளம் ஸௌ: ப^{4}வ**ீ**ரவண ஹோம் எனும் பீஜ மந்த்ரங்களின் ஸ்வரூபமாகவும், ய என்னும் எழுத்தின் வடிவமாகவும், ஈ**ீ**ந**ஶி**வமாகவும், ஹ்ரௌம் எனும் மந்த்ர வடிவமாகவும், ஸதா**ஶி**வரின் வடிவமாகவும், அருளலுக்குக் காரணமாகவும் இருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி

யோகி^{3}ஹ்ரு'த்பத்^{3}மவாஸிநே நம: |

யோகிகளின் இதயமாகிய தாமரை மலரில் வசிப்ப வருக்கு நமஸ்காரம்

யாஜ்ஞிகவர்தி^{4}நே நம: |

யாகம் செய்பவரின் மேன்மையையும் யாகங்களையும் வளர்ப்பவருக்கு நமஸ்காரம்

யஜநாதி[3] ஷட்கர்ம–தத்பராய நம: |

ப்ராஹ்மணர்கள் செய்யும் யாகம் செய்தல் (யஜனம்), யாகம் செய்வித்தல் (யாஜனம்), வேதம் படித்தல் (அத்யயனம்), வேதம் சொல்லிக் கொடுத்தல் (அத்யாபனம்), தானம் கொடுத்தல் (தானம்), தானம் பெறுதல் (ப்ரதிக்ரஹம்) ஆகிய ஆறு செயல்களையும் செய்து காட்டி, அவ்வாறு கர்மங்களின் லக்ஷ்யமாக விளங்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு நமஸ்காரம்

யஜுர்வேத[3]ஸ்வரூபாய நம: |

யஜுர் வேதத்தின் வடிவமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

யஜுஷே நம: | 5

யஜுர்வேத மந்திரங்களின் வடிவமாக இருப்பவருக்கு நமஸ்காரம் (யஜுர் வேதத்தால் போற்றப்படுபவருக்கு நமஸ்காரம்)

யஜ்ஞேஶாய நம: |

யஜ்ஞங்களின் ஈசராக இருப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞஶ்ரியே நம: |

யஜ்ஞங்களின் செல்வமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞராஜே நம: |

யஜ்ஞங்களின் அரசராக இருப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞபதயே நம: |

யஜ்ஞங்களின் தலைவராக இருப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞமயாய நம: | 10

யஜ்ஞங்களின் வடிவமாகவே இருப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞபூ^{4}ஷணாய நம: |

யஜ்ஞங்களின் அணிகலனாக இருப்பவருக்கு நமஸ்காரம் / யஜ்ஞங்களையே அணிகலனாக உடைய வருக்கு நமஸ்காரம்

யஜ்ஞப^{2}லதா^{3}ய நம: |

யஜ்ஞங்களின் பலனைக் கொடுப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞாங்க^{3}பு^{4}வே நம: |

யாகத்தின் அங்கமாய் இருப்பவருக்கு நமஸ்காரம் / யாகத்தை அங்கமாய் உள்ள த்ரவ்ய தக்ஷிணாதிகளையும் உண்டுபண்ணுபவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞபூ^{4}தாய நம: |

யாகத்தின் வடிவினருக்கு நமஸ்காரம் / யாகத்தின் வடிவம் ஆனவருக்கு (முருகப்பெருமானே யாகத்தின் திரு உருவமாய் விளங்குகிறார் என்பது கருத்து) நமஸ்காரம்

யஜ்ஞஸம்ரக்ஷிணே நம: | 15

யஜ்ஞத்தை நன்றாகக் காப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞபண்டி^{3}தாய நம: |

யஜ்ஞத்தில் சிறந்த பண்டிதராய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞவித்^{4}வம்ஸிநே நம: |

சரியான முறைகளின்படி இல்லாத (தக்ஷியாகம் போன்ற) யஜ்ஞத்தை அழிப்பவருக்கு நமஸ்காரம்

யஜ்ஞமேஷக^{3}ர்வஹராய நம: |

யஜ்ஞத்திலிருந்து தோன்றிய செம்மறியாட்டின் கர்வத்தை அடக்கியவருக்கு நமஸ்காரம். (ஒருமுறை நாரதரின் தலைமையில் நடந்த யாகத்தில் மந்திரங்கள் தவறாக உச்சரிக்கப்பட்டபோது, அதிலிருந்து அனைவரையும் அழிக்கும் கோபத்தோடு ஒரு செம்மறி ஆடு தோன்றியது;

முருகப்பெருமான் அதனை அடக்கி, தனது வாகனமாகக் கொண்டு, அதில் ஏறிச் சென்று சூரசம்ஹாரம் செய்தார்.)

யஜமாநஸ்வரூபாய நம: |

வேள்வியைச் செய்யும் யஜமானனின் வடிவத்தில் இருப்பவருக்கு நமஸ்காரம்.

யமாய நம: | 20

அகஒழுக்கத்தின் (தர்மத்தின்) வடிவமாக இருப்ப வருக்கு நமஸ்காரம்.

யமத^{4}ர்மபூஜிதாய நம: |

யமதர்மரால் பூஜிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

யமாத்^{3}யஷ்டாங்க^{3}ஸாத^{4}காய நம: |

யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யா ஹாரம், தாரணை, த்யானம், ஸமாதி ஆகிய எட்டு அங்கங்களை உடைய யோகத்தின் ஸாதகவடிவத்தில் இருப்பவருக்கு நமஸ்காரம்

யுத்^{3}த^{4}க^{3}ம்பீ^{4}ராய நம: |

யுத்தத்தில் மிக கம்பீரமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

யுத்^{3}த^{4}ஹரணாய நம: |

யுத்தத்தை திருடுபவருக்கு நமஸ்காரம் (முறையற்ற / தவறான நோக்கத்திற்காகத் தொடங்கும் யுத்தங்களை நிறுத்தித் தடுப்பவர் எனும் பொருளாம்.யுத்தத்தில் முறை தவறியவர்களின் பொருளை அபஹரிப்பவர் என்றும் கொள்ளலாம். சங்ககாலத்தில் போர்களில் 'ஆநிரை கவர்தல்' என, போரிட விரும்பும் மன்னன் எதிரி நாட்டு மன்னனின் பசுக்களை திருடிவருவதைக் கருத்தில் கொள்க.)

யுத்^{3}த^{4}நாதா^{2}ய நம: | 225 |

போர்களின் தலைவருக்கு நமஸ்காரம்

யுகா^{3}ந்தக்ரு'தே நம: |

யுகத்தின் முடிவை செய்பவருக்கு நமஸ்காரம்

யுகா^{3}வ்ரு'த்தாய நம: |

யுகங்களின் கால அளவானவருக்கு நமஸ்காரம்

யுக^{3}நாதா^{2}ய நம: |

க்ருத, த்ரேதா, த்வாபர, கலி ஆகிய சதுர்யுகங்களின் தலைவராய் இருப்பவருக்கு நமஸ்காரம்

யுக^{3}த^{4}ர்மப்ரவர்தகாய நம: |

க்ருத, த்ரேதா, த்வாபர, கலி ஆகிய சதுர்யுகங்களுக் கேற்ற தர்மங்களை நடத்துபவருக்கு நமஸ்காரம்

யுக^{3}மாலாத^{4}ராய நம: | 30

யுகங்களையே (பெரும் கால அளவுகளையே) மாலையாக அணிந்தவருக்கு நமஸ்காரம். (காலங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பது பொருள்)

யோகி^{3}நே நம: |

யோகியாய் இருப்பவருக்கு நமஸ்காரம்.

யோக^{3}வரதா^{3}ய நம: |

யோகத்திற்கு வரங்களை தருபவருக்கு நமஸ்காரம்

யோகி^{3}நாம் வரப்ரதா^{3}ய நம: |

யோகிகளுக்கு வரங்களைத் தருபவருக்கு நமஸ்காரம்

யோகீ^{3}ஶாய நம: |

யோகிகளின் தலைவருக்கு நமஸ்காரம்

யோகா^{3}நந்தா^{3}ய நம: | 35

யோகத்தின் ஆனந்த வடிவம் ஆனவருக்கு நமஸ்காரம்

யோக^{3}போ^{4}கா^{3}ய நம: |

யோகத்தின் போகம் ஆனவருக்கு நமஸ்காரம்

யோகா^{3}ஷ்டாங்க^{3}ஸாக்ஷிணே நம: |

யோகத்தின் யமம், நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, த்யானம், ஸமாதி ஆகிய எட்டு அங்கங்களுக்கும் ஸாக்ஷியாய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

யோக^{3}மார்க^{3}தத்பரஸேவிதாய நம: |

யோக மார்க்கத்தையே பெரும் லட்சியமாய் உடைய யோகிகளால் சேவிக்கப்படுபவருக்கு நமஸ்காரம்

யோக^{3}யுக்தாய நம: |

யோகத்தில் இணைந்திருப்பவருக்கு நமஸ்காரம்

யோக^{3}புருஷாய நம: | 40

யோகத்தின் வடிவமான யோகபுருஷருக்கு நமஸ்காரம்

யோக^{3}நித^{4}யே நம: |

யோகத்தையே நிதியாக உடையவருக்கு நமஸ்காரம்

யோக^{3}விதே^{3} நம: |

யோகங்கள் அனைத்தையும் அறிந்தவருக்கு நமஸ்காரம்

யோக^{3}ஸித்^{3}தி^{4}தா^{3}ய நம: |

யோகத்தின் ஸித்தியைக் கொடுப்பவருக்கு நமஸ்காரம்

யுத்^{3}த^{4}ஶத்ருப^{4}யங்கராய நம: |

போரில் எதிரிகளுக்கு பயங்கரமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

யுத்^{3}த^{4}ஶோகமர்த^{3}நாய நம: | 45

போரில் ஏற்படும் வருத்தங்களை (சோகங்களை) அழிப்பவருக்கு நமஸ்காரம்.

யஶஸ்விநே நம: |

புகழ்மிகக்கொண்டவருக்கு நமஸ்காரம்

யஶஸ்கராய நம: |

புகழை உண்டு பண்ணுபவருக்கு நமஸ்காரம்

யந்த்ரிணே நம: |

யந்த்ரங்களின் உடைமையாளராக இருப்பவருக்கு நமஸ்காரம்.

இயந்திரம் போல இயங்கிக் கொண்டிருக்கும் அகில சராசரங்களாகிய உலகங்களை இயக்கக்கூடியவராக இருக்கும் முருகப்பெருமானுக்கு நமஸ்காரம்.

யந்த்ரநாயகாய நம: |

யந்த்ரங்களின் பதியாக இருப்பவருக்கு நமஸ்காரம்.

யகாராத்^{3}யந்தஸம்பூர்ணாய நம: | 250 |

ய என்னும் எழுத்தாகவும், முதல், இடை, கடை என முழுமையாய் விளங்கி அனைத்துமாய் நிற்கும் முருகப் பெருமானுக்கு நமஸ்காரம்

மாத்ரு'காக்ஷராதி^{3}நாமாநி 50

(அன்னை பரா**ஶ**க்தியின் வடிவமாயிருக்கும் அ முதல் க்ஷ வரை உள்ள ஸம்ஸ்க்ருத எழுத்துக்களில் தொடங்கும் நாமங்கள் 50)

ஓம் நம: ஶிவாய ஸௌம் ஈம் நம் ளம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஐம் ஸௌ: வஶரவணப^{4} ஹம் அதோ^{4}முக^{2} ஹ: அஸ்த்ர–பரப்^{3}ரஹ்ம–பஞ்சக்ரு'த்யகாரண ஸுப்^{3}ரஹ்மண்ய

ஓம் நம: **ஶி**வாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் பொருளாக விளங்குபவரும், ஸௌம் ஈம் நம் ளம் ஸ்ரீ ம் ஹ்ரீம் க்லீம் ஐம் ஸௌ: வ**ஶ**ரவணப^{4} ஹம் எனும் பீஜ மந்த்ரங்களின் ஸ்வரூபமாகவும், கீழ் நோக்கி இருக்கும் அதோமுக **ஶி**வமாகவும், ஹ: எனும் மந்த்ர வடிவமாகவும், அஸ்த்ர வடிவமாகவும், பரப்ரஹ்ம வடிவமாகவும், படைத்தல், காத்தல்,

அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் களுக்கும் காரணமாகவும் இருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி

அம்... அஸ்த்ர–ஶிவாஸ்த்ர–பாஶுபத – வைஷ்ணவ ப்[3]ரஹ்மாஸ்த்ர– த்[4]ரு'தே நம: |

அம் எனும் பீஜமந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, அஸ்த்ரங்களில் சிறந்தவைகளாகிய **ஶி**வாஸ்த்ரமாம் பா**ஶு**பதம், விஷ்ணுவை தேவதையாக உடைய வைஷ்ணவம், பிரம்மனை தேவதையாக உடைய ப்ரஹ்மாஸ்த்ரம் ஆகியவற்றை தனது திருக்கரத்தில் ஏந்தியிருப்பவருக்கு நமஸ்காரம்.

ஆம் ... ஆநந்த[3]ஸுந்த[3]ராகாராய நம: |

ஆம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஆனந்தத்தை தரும் மிக அழகிய திருமேனியை உடையவர்க்கு நமஸ்காரம்.

இம் ... இந்த்[3]ராணீ–மாங்க[3]ல்ய–ரக்ஷகாய நம: |

இம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, **ஶூ**ரபத்மன் முதலிய கொடிய அரக்கர்களை வென்று, தேவேந்திரனின் உயிரைக் காத்து, அதன் மூலம் இந்திராணியின் மாங்கல்யத்தை காப்பாற்றிய முருகப் பெருமானுக்கு நமஸ்காரம்.

ஈம் ... ஈஷணாத்ரய–வர்ஜிதாய நம: |

ஈம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் மூன்று ஆசைகளற்று விளக்குபவருக்கு, அவ்வாசைகளை அறுப்ப வருக்கும் நமஸ்காரம்.

உம் ... உமா–ஸுதாய நம: | 5

உம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, உமையின் மைந்தனுக்கு நமஸ்காரம்.

ஊம் ... ஊர்த்^{4}வரேத:–ஸுதாய நம: |

ஊம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஊர்த்^{4}வரேதஸ் (மேல் நோக்கிய ரேதஸ்ஸை உடையவர்) என்னும் திருநாமம் கொண்ட சிவபெருமானின் மைந்தருக்கு நமஸ்காரம்.

ரு'ம் ... ரு'ணத்ரய–விமோசநாய நம: |

ரு'ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, தேவ கடன், ரிஷி கடன், பித்ருக் கடன் ஆகிய முக்கடன்களி லிருந்து விமோசனம் தருபவருக்கு நமஸ்காரம்.

ரூ'ம் ... ரு'தம்ப^{4}ராத்ம–ஜ்யோதிஷே நம: |

ரூ'ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, உண்மையின் வடிவமாய் விளங்கும் **ஸ்ரீ**வபெருமானின் ஆத்மஜோதியாய் (உள்ளொளியாய்)இருக்கும் முருகனுக்கு நமஸ்காரம்

லு'ம் ... லுப்தாசார–மநோதூ^{3}ராய நம: |

லு'ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஆசாரங்களை மீறி நடப்பவர்களின் மனதிலிருந்து வெகு தூரத்திலிருப்பவருக்கு நமஸ்காரம்

லூ'ம் ... லூதபா^{4}வபாஹ–பே^{4}தி^{3}நே நம: | 10

லூ'ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, பின்னிப் பிணைந்திருக்கும் ஸம்ஸார ஸாகரத்தின் கட்டையறுப்பவருக்கு நமஸ்காரம்

ஏம் ... ஏணாங்கத^{4}ர–ஸத்புத்ராய நம: |

ஏம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, மானை கையில் ஏந்தும் சிவபெருமானின் நன்மகனுக்கு நமஸ்காரம்

ஐம் ... ஐஶ்வர்ய பத^{3}–ஸந்தா^{3}யினே நம: |

ஐம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஐஶ்வர்யம் எனும் **ஸ்ரீ**வபதத்தை நன்றாக தருபவருக்கு நமஸ்காரம்

ஓம் ... ஓங்காரார்த^{2}–ஸ்ரீமத்^{3}கு^{3}ரவே நம: |

ஓம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஓங்காரமாம் ப்ரணவப் பொருளை **ஸ்ரீ**வபெருமானுக்குக் கூறிய திருமிகப் பொருந்திய குருவிற்கு நமஸ்காரம்

ஔம் ... ஔந்நத்ய–ப்ரதா^{3}யகாய நம: |

ஔம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, உன்னதத் தன்மையை மகிழ்ந்து வழங்குபவருக்கு நமஸ்காரம்

அம் ... அஸ்த்ர–குக்குட–க்ஷுரிகா–வ்ரு'ஷப^{4}–
ஶுத்^{3}தா^{4}ஸ்த்ர–த^{4}ராய நம: | 15

அம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, அஸ்த்ரங்கள், சேவற்கொடி, சுரிகைக்கத்தி, வ்ருஷபம், **ஶு**த்தமான பல அஸ்த்ரங்களை தரித்திருப்பவருக்கு நமஸ்காரம்

அ: ... அத்^{3}வைத–பரமாநந்த^{3}–சித்^{3}விலாஸ–
மஹாநித^{4}யே நம: |

அ: எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, இரண்டற்ற அத்வைதமாம் பரமானந்தத் தூயபேரறிவில் நன்றாய் விளங்கும் பெரும் நிதிக்கு நமஸ்காரம்

கம் ... கார்ய காரண–நிர்முக்தாய நம: |

கம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, காரிய காரணங்களிலிருந்து விடுபட்டு விளங்குபவருக்கு நமஸ்காரம்.

க^{2}ம் ... க^{2}ண்டே^{3}ந்து^{3}–மௌலிதநயாய நம: |

க^{2}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, சிரத்தினில் பிறையினைச் சூடிய சிவபெருமானின் மகனுக்கு நமஸ்காரம்

க^{3}ம் ... க^{3}த்^{3}ய–பத்^{3}ய–ப்ரீதிஜ்ஞாய நம: |

க^{3}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, இயல், பாடல்கள் ஆகியவற்றின் இனிமையை அறிந்திருப்ப வருக்கு நமஸ்காரம்

க^{4}ம் ... க^{4}ந–க^{3}ம்பீ^{4}ர–பூ^{4}ஷணாட்^{4}யாய நம: | 20

க^{4}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, மிக கம்பீரமான அழகிய பூஷணங்களையும் ஆபரணங் களையும் அணிந்தவருக்கு நமஸ்காரம்

ஙம் ... ஙகாராகாரகத்^{3}வந்த்^{3}வ–ஸர்வ–ஸந்த்^{4}யாத்ம–
சிந்மயாய நம: |

ஙம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஙகாரவடிவிலுள்ள (நன்மை-தீமை, இரவு-பகல், புகழ்-இகழ் முதலிய) எல்லா இருமைகளும் இணையும் (இவற்றுக் கெல்லாம் அப்பாற்பட்ட) பேரறிவுமயமான ஆத்மஸ்வரூபியாய் இருக்கக்கூடியவருக்கு நமஸ்காரம்.

சம் ... சிதா^{3}நந்த^{3}–மஹாஸிந்து^{4}–மத்^{4}ய–
ரத்நஶிகா^{2}மணயே நம: |

சம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, பேரறிவும் ஆனந்தமுமாய் இருக்கின்ற பெருங்கடலின் நடுவில் உதித்த மிக உயர்ந்த ரத்ன வடிவில் இருப்பவருக்கு நமஸ்காரம்.

ச^{2}ம் ... சே^{2}தி^{3}தாரோஷ–தை^{3}த்யௌகா^{4}ய நம: |

ச^{2}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, அரக்கர் கூட்டத்தை மிச்சமில்லாமல் வெட்டி வீழ்த்துபவருக்கு நமஸ்காரம்

ஜம் ... ஜரா–மரண–நிவர்தகாய நம: |

ஜம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, மூப்பு, மரணம் ஆகியவற்றை போக்குபவருக்கு நமஸ்காரம்

ஜ^{2}ம் ... ஜ^{2}ல்லரீ–வாத்^{3}ய–ஸுப்ரியாய நம: | 275 |

ஜ^{2}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஜல்லரி என்னும் வாத்தியத்தை மிகவும் விரும்புபவருக்கு நமஸ்காரம்

ஞம் ... ஜ்ஞானோப–தே^{3}ஶகர்த்ரே நம: |

ஞம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஞான உபதேசத்தை செய்பவருக்கு நமஸ்காரம்.

டம் ... டங்கிதாகி^{2}ல–லோகாய நம: |

டம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, அகில உலகங்களையும் நடுங்கச் செய்யும் பராக்ரமத்தை உடையவருக்கு நமஸ்காரம்.

ட^{2}ம் ... ட^{2}காரமத்^{4}ய–நிலயாய நம: |

ட^{2}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ட^{2} எனும் எழுத்தின் நடுவில் வசிப்பவராகவும் இருப்பவருக்கு நமஸ்காரம்

ட^{3}ம் ... ட^{3}க்காநிநாத^{3}–ப்ரீதிகராய நம: |

ட^{3}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, உடுக்கையின் நல்லொலியால் மகிழ்ச்சியுறுபவருக்கு நமஸ்காரம்

ட^{4}ம் ... டா^{4}லிதாஸுர–குலாந்தகாய நம: | 80

ட^{4}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, போரிடப் பறந்து தாவி வந்த அசுரர்களின் குலத்தை அழித்தவருக்கு நமஸ்காரம்.

ணம் ... ணபி^{3}ந்து^{3}த்ரய–வந்மத்^{4}ய–பி^{3}ந்த்^{3}–
வாஸ்லிஷ்ட–ஸுவல்லிகாய நம: |

ணம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ண-வின் மூன்று புள்ளிகளைப் போல நடுப்புள்ளியை சூழ்ந்து இருக்கும் அழகிய கொடி போன்றவருக்கு நமஸ்காரம். (ஓங்கார வடிவினருக்கு நமஸ்காரம்)

தம் ... தும்பு^{3}ருநாரதா^{3}ர்சிதாய நம: |

தம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, தும்புரு, நாரதர் ஆகிய துதி பாடும் முனிவர்களால் அர்ச்சிக்கப் படுபவருக்கு நமஸ்காரம்.

த^{2}ம் ... ஸ்தூ^{2}ல–ஸூக்ஷ்ம–ப்ரத^{3}ர்ஸகாய நம: |

த^{2}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஸ்தூலம் (பருப்பொருள்), ஸூக்ஷ்மம் (நுண்பொருள்) ஆகிய இரண்டையும் நன்றாக காட்டக்கூடிய ஆத்மஸ்வரூபியாய் இருப்பவருக்கு நமஸ்காரம்.

த^{3}ம் ... தா^{3}ந்தாய நம: |

த^{3}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, தவத்திற்கு வரும் தடைகளையும், தம் பக்தர்கள் செய்யும் குற்றங்களையும் பொறுப்பவருக்கும் அவர் வேண்டும் வரங்களை அள்ளி அள்ளி வழங்குபவருக்கும் நமஸ்காரம்.

த^{4}ம் ... த^{4}நூர்பா^{3}ணநாராசாத்^{3}யஸ்த்ரத^{4}ராய நம: | 85

த^{4}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, பெரும் வில்லினையும் பல அம்புகளையும், இரும்பினால் செய்யப்பட்ட பாணங்களையும், தரித்திருப்பவருக்கு நமஸ்காரம்

நம் ... நிஷ்கண்டகாய நம: |

நம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, எவ்வித தடைகளும், எதிரிகளும், துன்பங்களும் அற்றவருக்கு நமஸ்காரம்.

பம் ... பிண்டி^{3}பால–முஸலத^{3}ண்ட^{3}–க^{2}ட்^{3}க^{3}–
கே^{2}டக–த^{4}ராய நம: |

பம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, பிண்டிபாலம் எனும் ஆயுதம், உலக்கை, தண்டம், கத்தி, கேடயம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியவருக்கு நமஸ்காரம்

ப^{2}ம் ... ப^{2}ணிலோக–விபூ^{4}ஷணாய நம: |

ப^{2}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, படம் கொண்ட பாம்புகள் வாழும் நாகலோகத்திற்கு அழகு சேர்க்கும் ஆபரணம் போல விளங்குபவருக்கு நமஸ்காரம்

ப^{3}ம் ... ப^{3}ஹுதை^{3}த்ய–விநாஶகாய நம: |

ப^{3}ம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, பல அஸுரர்களை அழித்தவருக்கு நமஸ்காரம்

ப^{4}ம் ... ப^{4}க்த–ஸாலோக்ய–ஸாரூப்ய–ஸாமீப்ய–
ஸாயுஜ்ய–தா^{3}யிநே நம: | 90

பக்தர்களுக்கு தன் உலகிற்கு வரும் ஸாலோக்ய முக்தியையும்,தன் உருவைப் பெரும் (தெய்வவடிவம்) ஸாரூப்ய முக்தியையும், தன் அருகில் வரும் ஸாமீப்ய முக்தியையும் தன்னோடு இரண்டறக் கலக்கும் ஸாயுஜ்ய முக்தியையும் தருபவருக்கு நமஸ்காரம்.

மம் ... மஹாஶக்தி–ஶூல–க^{3}தா^{3}–பரஶுபாஶாங்குஶ–
த்^{4}ரு'தே நம: |

மம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, பெரும் சக்தி பொருந்திய வேல், சூலம், கதை, கோடாலி, பாசக் கயிறு, அங்குசம் ஆகியவற்றை ஏந்தியவருக்கு நமஸ்காரம்

யம் ... யந்த்ர–தந்த்ர–பே^{4}தி^{3}நே நம: |

யம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, தீயோரால் ஏவப்பட்ட யந்த்ர, தந்த்ரங்களை துளைத்துப் பிளப்பவருக்கு நமஸ்காரம்

ரம் ... ரஜஸ்–ஸத்த்வ–கு^{3}ணாந்விதாய நம: |

ரம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, அஸுரர்களை ஸம்ஹரிக்கும் போது ரஜோகுணமும் பக்தர் களுக்கு அருளும் போது, ஸத்வகுணமும் கொண்டவருக்கு நமஸ்காரம்.

லம் ... லோகாதீதகு–^{3}ணோபேதாய நம: |

லம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, உலக இயல்பினை விட மிக மேலான நற்குணங்களை உடையவருக்கு நமஸ்காரம்

வம் ... விகல்ப–பரிவர்ஜிதாய நம: | 95

வம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, எண்ண ஓட்டங்கள் ஏதுமற்றவர்க்கும் அந்த எண்ண ஓட்டங்களை அழிப்பவருக்கும் நமஸ்காரம்

ஶம் ... ஶங்க^{2}சக்ர–குலிஶத்^{4}வஜ–த^{4}ராய நம: |

ஶம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, **ஶ**ங்கு, சக்ரம், வஜ்ராயுதம், சேவற்கொடி ஆகியவற்றை ஏந்தியவருக்கு நமஸ்காரம்

ஷம் ... ஷட்சக்ரஸ்தா^{2}ய நம: |

ஷம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், வி**ஶு**த்தி, ஆஜ்ஞா, ஸஹஸ்ராரம் ஆகிய ஆறு ஆதாரசக்ரங்களில் வீற்றிருப்பவருக்கு நமஸ்காரம்

ஸம் ... ஸர்வ–மந்த்ரார்த^{2}–ஸர்வ–ஜ்ஞத்வ–முக்^{2}ய–
பீ^{3}ஜஸ்வ–ரூபாய நம: |

ஸம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, எல்லா மந்திரங்களின் அர்த்தமாகவும் எல்லாம் அறிந்தவர் களுள் முக்யமானவராகவும், பீஜ மந்திரங்களின் வடிவான வராகவும் இருக்கும் முருகனுக்கு நமஸ்காரம்.

ஹம் ... ஹ்ரு'த^{3}யாம்பு^{3}ஜ–மத்^{4}யஸ்த^{2}–விரஜவ்யோம–நாயகாய நம: |

ஹம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, இதயத்தாமரையின் நடுவில் இருப்பவரும், அப்பழுக்கற்ற வரும், தூய தஹராகாஶத்தின் (இதயத்தில் விளங்கும் வெற்றிடத்தை தஹராகாஶம் என்கிறோம்) நாயகராய் விளங்குபவருக்கு நமஸ்காரம்

ளம் ... லோகைக–நாதா^{2}ய நம: | 300 |

ளம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, உலகங்கள் அனைத்திற்கும் ஒரு தலைவனாய் இருப்பவருக்கு நமஸ்காரம்

க்ஷம் ... ஏக–பஞ்சாஶத்^{3}க்ஷர–ஸம்பூர்ணாய நம: |

க்ஷம் எனும் பீஜ மந்த்ரத்தின் வடிவமாய் இருப்பவருக்கு, ஐம்பத்தொரு அக்ஷர மந்த்ர எழுத்துக்களின் முழுமையாக இருப்பவருக்கு நமஸ்காரம்.

அம் ஆம் இம் ஈம் உம் ஊம் ரு'ம் ரூ'ம் ல்ரு'ம் ல்ரூ'ம் ஏம் ஐம் ஓம் ஔம் அம் அ:

கம் க^{2}ம் க^{3}ம் க^{4}ம் ங்ம் சம் ச^{2}ம் ஜம் ஜ^{2}ம் ஞம்
டம் ட^{2}ம் ட^{3}ம் ட^{4}ம் ணம் தம் த^{2}ம் த^{3}ம் த^{4}ம் நம்
பம் ப^{2}ம் ப^{3}ம் ப^{4}ம் மம் யம் ரம் லம் வம்
ஶம் ஷம் ஸம் ஹம் ளம் க்ஷம் நம:

ஶிவாய வப^{4}ணவரஶ ஹம் ஹிம் ஹூம் ஹேம் ஹோம் ஹம்

ஸத்^{3}யோஜாத–வாமதே^{3}வ–அகோ^{4}ர–தத்புருஷ–ஈஶாந–அதோ^{4}முக^{2}–

ஹாம் ஹீம் ஹூம் ஹைம் ஹௌம் ஹ:

ஹ்ரு'த^{3}ய–ஶிர:–ஶிகா^{2}–கவச–நேத்ரத்ரய– அஸ்த்ர–
ப்^{3}ரஹ்ம–விஷ்ணு–ருத்^{3}ர–மஹேஶ்வர– ஸதா^{3}ஶிவ–
பரப்^{3}ரஹ்ம–ஸ்ரு'ஷ்டி–ஸ்தி^{2}தி–ஸம்ஹார–திரோபா^{4}வ–

அநுக்^{3}ரஹ–பஞ்சக்ரு'த்யகாரணாய ஜக^{3}த்^{3}பு^{4}வே
வசத்^{3}பு^{4}வே விஶ்வபு^{4}வே ருத்^{3}ரபு^{4}வே ப்^{3}ரஹ்மபு^{4}வே
அக்^{3}நிபு^{4}வே லம் வம் ரம் யம் ஹம் ஸம் ஸர்வாத்மகாய

ஓம் ஹ்ரீம் வ்ரீம் ஸௌ: ஶரவணப^{4}வ
ஓம் ஸர்வலோகம் மம வஶமாநாய

மம ஶத்ருஸங்க்ஷோப^{4}ணம் குரு குரு
மம ஶத்ரூந்நாஶய நாஶய, மம ஶத்ரூந்மாரய மாரய
ஷண்முகா^{2}ய மயூரவாஹநாய ஸர்வராஜப^{4}யநாஶநாய

ஸ்கந்தே^{3}ஶ்வராய வப^{4}ணவரஶ க்ஷாம் க்ஷீம் க்ஷூம்
க்ஷைம் க்ஷௌளம் க்ஷ: ஹ்ரூம் ப^{2}ட் ஸ்வாஹா நம: |

அம் ஆம் இம் ஈம் உம் ஊம் ரு'ம் ரூ'ம் ல்ரு'ம் ல்ரூ'ம் ஏம் ஐம் ஓம் ஔம் அம் அ:

கம் க^{2}ம் க^{3}ம் க^{4}ம் ஙம்
சம் ச^{2}ம் ஜம் ஜ^{2}ம் ஞம்
டம் ட^{2}ம் ட^{3}ம் ட^{4}ம் ணம்
தம் த^{2}ம் த^{3}ம் த^{4}ம் நம்
பம் ப^{2}ம் ப^{3}ம் ப^{4}ம் மம்
யம் ரம் லம் வம்
ஶம் ஷம் ஸம் ஹம் ளம் க்ஷம்

ஆகிய மாத்ருகா பீஜ மந்த்ரங்களின் ஸ்வரூபமாய் இருப்பவருக்கு நமஸ்காரம்.

சிவபெருமானின் வடிவமானவரும், வப^{4}ணவர**ஶ** ஹம் ஹிம் ஹ்ரூம் ஹ்ரைம் ஹ்ரௌம் ஹ்ரம் ஆகிய மந்த்ரபீஜஸ்வரூபியும், ஸத்யோஜாத- வாமதேவ-அகோர- தத்புருஷ-ஈ**ஶா**ன-அதோ முகங்களின் வடிவமானவரும், ஹாம் ஹ்ரீம் ஹ்ரூம் ஹைம்

ஹௌம் ஹ: ஆகிய மந்த்ரபீஜஸ்வரூபியும், மந்த்ரமயமான தேஹத்தில் இருதயம், சிரம், சிகை, கவசம், மூன்று கண்கள், அஸ்த்ரம் ஆகியவற்றின் வடிவினரும், ப்^{3}ரஹ்மா, விஷ்ணு, ருத்^{3}ரர், மஹேஶ்வரர், ஸதா^{3}ஶிவர் என பரப்^{3}ரஹ்ம வஸ்துவா யிருந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களை நடத்துபவரும், பூவுலகையும், சொற்களையும், அனைத்து உலகங்களையும், ருத்ரனையும், பிரம்மாவையும், அக்னியையும் படைத்து அவற்றின் வடிவமாக இருப்பவரும், லம் வம் ரம் யம் ஹம் ஸம் ஆகிய பீஜ மந்திரங்களின் வடிவமாய் இருப்பவரும், அனைத்திலும் நிறைந்தவரும் அனைத்துமானவருமாகிய முருகப் பெருமானை வணங்குகிறேன்.

எல்லா உலகங்களையும் எனது வசப்படுத்துவாயாக, என்னுடைய (காமம், கோபம் முதலிய) எதிரிகளுக்கு துன்பத்தை (உபத்ரவத்தை) ஏற்படுத்துவாயாக, எனது (காமம், கோபம் முதலிய) எதிரிகளை வெல்வாயாக, எனது (காமம், கோபம் முதலிய) எதிரிகளை நீக்குவாயாக! ஆறுமுகனுக்கு, மயில் வாஹனனுக்கு, அரசாங்கத்தால் ஏற்படும் அனைத்து பயங்களையும் போக்குபவனுக்கு, கந்தனாம் தலைவனுக்கு, வப^{4}ணவரஶ கூஷாம் கூஷீம் கூஷூம் க்ஷை: க்ஷௌள: கூஷ: ஹ்ரூம் ப^{2}ட் ஆகிய மந்திரபீஜங்களின் ஸ்வரூபனுக்கு (ஹோமமாகப் பண்ணும் போது ஆஹூதியை அக்னியில்) ஸமர்ப்பணம் செய்கிறேன். நமஸ்காரம் செய்கிறேன்.

சுபம்

முருகா சரணம்